NAOSL

ජාතික විගණන කාර්යාලය

தேசிய கணக்காய்வு அலுவலகம்

NATIONAL AUDIT OFFICE



වාර්තාවේ අංකය : ENV/2024/01

அறிக்கை இல. : ENV/2024/01

Report No. : ENV/2024/01





# ශ්‍රී ලංකාවේ ජාතික උද්‍යාන වල තෘණ භූමි සංරක්ෂණ ක්‍රියාවලිය ඇගයීම පිළිබඳ පාරිසරික විගණන වාර්තාව

# இலங்கையின் தேசிய பூங்காக்களிலுள்ள மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாக்கும் நடைமுறையினை மதிப்பீடு செய்தல் தொடர்பான சுற்றாடல் கணக்காய்வு அறிக்கை

# Environmental Audit Report on Evaluation of Grassland Conservation Process in National Parks of Sri Lanka







පරිසර විගණන අංශය

சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு

Environment Audit Division

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

காட்டு மிருகங்கள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அத்தியாயம்) கீழ் வன சீவராசிகள் பாதுாப்பு திணைக்களத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற தேசிய பூங்காக்கள் இலங்கையில் பாதுகாக்கப்பட வேண்டிய காட்டு வளங்களாக உள்ளதுடன் சுற்றாடலின் சமநிலைத்தன்னமையினை பேணிப்பாதுகாப்பதற்கும் வன சீவராசிகளின் உள்ளமையினையும் முன்னிட்டு இத்தொகுதியினூடாக பாரிய வெளிப்படுத்தல் வழங்கப்படுகின்றது. இந்த தேசிய பூங்காக்களில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்களானது அதிக சுற்றாடல் முக்கியத்துவம் வாயந்ததாக உள்ளதுடன் புல் மேயும் அதிக அளவான மிருகங்களுக்கான வதிவிடமாக இருத்தல், இனவிருத்தியினைக் கொண்டிருத்தல், இளஞ்செடிகள் மற்றும் மிருகங்களின் சமநிலைதன்மையை பேணுதல், மண்ணின் தரத்தை பாதுகாத்தல், பயிர்கள் மூடப்படாதுள்ள திறந்த நிலப்பிரதேசங்கள் அழகாக பரந்து காணப்படுவதன் மூலம் இயற்கையை கவருகின்ற யானைகள், மான்கள், கடம்பை மான்கள் போன்ற மிருகங்களை பார்வையிடுவதற்கு அதிக அளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தரல், சுற்றுலா கவர்ச்சியை வெற்றிகொள்வதன் மூலம் நாட்டிற்கு அதிக அளவான சுற்றுப்பயணிகள் வருகை தரல், சுற்றுலா கவர்ச்சியை வெற்றிகொள்வதன் மூலம் நாட்டிற்கு அதிக அளவிலான வருமானத்தை சேகரிக்க கூடியதாக இருத்தல் மற்றும் அதன் மூலம் பொருளாதாரம் அபிவிருத்தியடைதல் ஆகிய பல பயன்கள் தேசிய பூங்காக்களின் இந்த மேய்ச்சல் நிலங்களின் மூலம் இடம்பெறுகின்றன. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் தற்பொழுது 26 பூங்காக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த பூங்காக்களின் உள்ளமை தொடர்பாக அண்மைக்காலங்களில் உருவாகியுள்ள சிக்கல்களின் காரணமாக அவற்றின் உள்ளமை சவால்களுக்கு உள்ளாகியுள்ளது. அதற்கிணங்க அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்க நிறுவனங்களின் கடமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் இச்சுற்றாடல் முறைமையினூடாக சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற தாக்கங்களை மதிப்பீடு செய்யும் வகையில் 09 தேசிய பூங்காக்கள் மற்றும் 02 சரணாலயங்களுக்கு கவனம் செலுத்தப்பட்டது. தேசிய பூங்காவிலுள்ள இந்த மேய்ச்சல் நிலங்களின் முக்கியத்துவம் இதுவரை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாமையினால் மேய்ச்சல் நிலங்களின் உள்ளமைக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களில் அதிகரிப்பு காணப்பட்டது. சுற்றாடல் ரீதியாக மிகவும் முக்கியத்துவமான இந்த மேய்ச்சல் நிலப் பிரதேசம் அழிவுக்கு உள்ளாகும் ஆபத்துக் காணப்படுவதனால் மேய்ச்சல் நிலத்தை பேணிப் பாதுகாப்பதற்காக உரிய அதிகாரம் உள்ள நிறுவனங்களின் மூலம் தமது செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதா என்பதனை மதிப்பீடு செய்வதும் காணப்படுகின்ற சிக்கல்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதும் இக்கணக்காய்வின் குறிக்கோளாகும்.

மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமான ஒரு தேசிய கொள்கை மற்றும் முகாமைத்துவ திட்டம் இல்லாமை வெளிநாட்டு ஆக்கிரமிக்கும் பயிர்கள் தீவிரமாக பரவுதல், மேய்ச்சல் நிலத்தை பேணிப்பாதுகாப்பதற்கு போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காமை, அனுமதியின்றி பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், அனுமதியற்ற குடியிருப்புக்கள் காணப்படல், பசுமாடுகளை பூங்காக்களுக்குள் அனுமதியின்றி உட்படுத்துதல் மற்றும் அனுமதியின்றி மாட்டுப்

பண்ணைகளை பூங்காக்களுக்குள் பேணிவருவதனால் புற்களை மேயும் மிருகங்களின் உணவு குறைவடதல், புதிய நீர்த்திட்ட செயற்திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக நீரினை விடுவிக்கும் போது குளங்கள் நீர் நிரம்பியிருப்பதன் காரணமாக இயற்கையாக மேய்ச்சல் நிலங்கள் காணப்படுவதற்குத் தடை ஏற்படுதல், சட்ட விதிகள் காணப்பட்டிருந்தும் அவற்றினை அமுல்ப்படுத்துவதில் சிக்கல் காணப்படல், போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்காமை, உயிரினங்களின் நடத்தைப் போக்கு, சுற்றாடல் நிலைமைகள், கமத்தொழில் ஆகிய பிரிவுகளை சமநிலையாக கட்டுப்படுத்தப்படாமையால் நிலைபேறான சுற்றாடல் முகாமைத்துவம் இடம்பெற்றிருக்காமை, மேய்ச்சல் நிலங்கள் நிலையாகக் காணப்படுவதற்கு தடை ஏற்படுதல், குளங்கள் மறுசீரமைப்புச் செய்யப்படாமை, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் சரணாலயங்களை தேசிய பூங்காக்கள் என வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டிருக்காமை (கஹல்ல, பல்லேகல, கலாவெவ) தேசிய பூங்காக்களின் சுற்றாடல் தரவு முறைமை இல்லாமை, அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தும் போது சுற்றாடலுக்கும் மிருகங்களுக்குமிடையே மோதல்கள் ஏற்படாத வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படாமை, சுற்றுலா பயணிகளின் வருகை 2019 ஆம் ஆண்டிலிருந்து குறைவடைந்ததோடு தேசிய பூங்காக்களின் வருமானம் குறைவடைதல், கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட அனைத்து தேசிய பூங்காக்களிலும் காணப்படுகின்ற குளங்கள் முறைமைக்கு மற்றும் ஏனைய மேய்ச்சல் நிலங்களின் புற்கள் வளர்ச்சியடைவதற்கு ஆக்கிரமிக்கும் பயிர்கள் விரிவடைதல் அதிக அளவில் தடையாக இருத்தல், தேசிய பூங்காக்களில் இருக்கும் காட்டு யானைகள் முதன்மையாக பயிர்களை உண்ணும் மிருகங்களின் பிரதான உணவாகிய புல் தட்டுப்பாட்டினால் யானை மனித மோதல் அதிகரித்துள்ளது எனவும் காட்டு யானைகளால் பயிர்ச் செய்கைகளை சேதப்படுத்துதல் முதலியன இக்கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேற்கூறிய அவதானிப்புக்கள் சம்பந்தமாக தேசிய பூங்காக்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்து மிருகங்களுக்கு தொடர்ச்சியாக உணவுகளை வழங்குவதற்கு முடியுமான வகையில் திட்டங்களைத் தயாரித்தல், சட்டரீதியான ஏற்பாட்டினை அமுல்ப்படுத்துதல் மற்றும் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல், ஆளணியினை ஈடுபடுத்துதலும் ஏனைய நிதி வசதிகளை போதியளவில் வழங்குதலும், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு உயிரின வகைகளை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறையினைத் தயாரித்தல், வீட்டு மிருகங்கள் மேய்ச்சல் நிலங்களுக்குள் வருவதனை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்துதல், அபிவிருத்தி செயற்திட்டங்களை சிறப்பாக திட்டமிடுதல், மிருகங்கள் மற்றும் சுற்றாடலுக்கு மோதல் ஏற்படாத வகையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையே மோதல் ஏற்படாத வகையில் முகாமைத்துவம் செய்தல், யானை மனித மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக உரிய காலத்தில் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் தேசிய பூங்காக்களின் முகாமைத்துவ மற்றும் செயல்முன்னேற்ற மீளாய்விற்காக நாளதுவரையான தரவு முறைமையை பேணுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டது.

## 2. அறிக்கையின் பின்னணியும் தன்மையும்

### 2.1 பின்னணி

### 2.1.1 இலங்கையில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்கள் தொடர்பான அறிமுகம்

இலங்கையின் 65,610 சதுர கிலோ மீற்றர் அளவான நிலப்பகுதியில் 12,000 சதுர கிலோ மீற்றர் (18 சதவீதம்) அளவான பிரதேசத்தில் மேய்ச்சல் நிலம் பரந்து காணப்படுகின்றது. பயிர் மூடப்படாத நிலப்பிரதேசங்களில் மண்ணை பாதுகாப்பதனை முன்னிட்டு இவை பாரிய சேவையினை வழங்குகின்றது. இந்த மேய்ச்சல் நிலமானது ஈரலிப்பான மலைப்பிரதேசத்தில் காணப்படும் ஈரலிப்பு சமவெளி, உலர் மலைப்பிரதேசத்தில் காணப்படும் உலர் சமவெளி, உலர் வலயத்தில் காணபடுகின்ற சமதளம், காடு மற்றும் வில்லு என்பவனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்களை பின்வரும் வகையில் வகைப்படுத்திக் காட்டலாம்.

**(i) ஈரலிப்பு சமவெளி**

2,000 மீற்றர்களுக்கு மேற்பட்ட உயர்ந்த வெப்பமான மலைநாட்டு வனாந்திரங்கள் காணப்படும் பிரதேசங்களில் இந்த ஈரலிப்பு சமவெளி காணப்படுகின்றது. இந்த ஈரலிப்பு சமவெளியானது 5,500 ஹெக்டயர் அளவில் பரவிக் காணப்படுவதுடன் அவை ஹோட்டன் சமவெளி எல்க் சமவெளி, மான் சமவெளி, சீதா எலிய, பகவந்தலாவ, போபத்தலாவ ஆகிய பிரதேசங்களில் விரிவடைந்துள்ளது.

நன்கு விரிவடைந்துள்ள அதிக மழை வீழ்ச்சியுடனான ஈரலிப்பு சமவெளியானது ஆண்டு முழுவதும் ஈரலிப்புள்ளதாகும். புற்கள் வகை புதர்களுடனானதுடன் மெல்லிய வன்மையான பிரதேசங்களை போலல்லாது இந்த ஈரலிப்பான சமவெளிகளில் தனித்தனியாக வளர்கின்ற மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் அதிக அளவானவை பூவரசு (Rhododendron Zeylancium) வகையான மரங்களாகும். அம்மரங்களின் தண்டுகள் வளைந்த தன்மையை கொண்டுள்ளதுடன் அதன் பிரதான தண்டுகள் மற்றும் கிளைகள் மிகவும் தடிப்பாக வளரும் செடிகளால் மூடப்பட்டுள்ளது. ஈரலிப்பு சமவெளிகளுக்கான பண்புகளான புற்கள் வகைகளான Chrysopogon Zeylanieus மற்றும் Chrysopogon உடன் வளரும் ஏனைய புற்களானவை Arudinell, Pollinia, Ischacmum மற்றும் Themeda என்பதாகும். உலர் சமவெளிகளைப் போலல்லாது புற்கள் தவிர்ந்த ஆக்கிரமிப்பு பயிர்கள் சிலவும் இங்கே உள்ளன. வழக்கமாக உலர் பிரதேசங்களில் வளரும் பெரணி வன Pteridium aguilinum என்பதுவும் இங்கே காணப்படுகின்றது.

### (ii) உலர் சமவெளி

ஈரலிப்பு சமவெளியினைவிட அதிக அளவில் விரரிவடைந்துள்ள உலர் சமவெளியானது 75,000 ஹெக்டயர் அளவினைக் கொண்டுள்ளது. உலர் சமவெளி பற்றிய தெளிவான உதாரணம் வெலிமடை மேட்டு நிலமாகம். இம்மேட்டு நிலத்தின் பாரியளவு பிரதேசத்தில் உள்ள உலர் சமவெளியானது சுவடுகளும் மலை அடிவாரங்களும் உள்ள சிறிய காட்டு பிரதேசங்களையும் தவிர்த்து முழுமையாக மரங்கள் இல்லாத பிரதேசமாகும். இவ்வாறான மேய்ச்சல் நிலம் உள்ள ஏனைய பிரதேசமானது நக்கிள்ஸ் மலைப்பகுதியிலும் தெனியாய, இறக்குவானை மலைப்பகுதியிலும் காணப்படுகின்றது. இப்பிரதேசங்கள் அலையான நிலங்களையும் சுழற்சியான மலை முகடுகளையும் உள்ளடக்கியுள்ளது. உலர் சமவெளிக்கு வகையுடன் புல்வகைகளின் பெயர் பெகிரி மானா (Cymbopogon nardus) ஆகும். இந்த வகையுடன் உள்ள சமாந்தரமான புல் வகையானது Arudinella, Villosa, Pollinia மற்றும் Ischaemum ஆகும். Pteridiumaquailinum எனும் பெயருள்ள பெரணி செடியும் இங்கு காணப்படுகின்றது.

தேயிலைப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்ட காலத்தின் போது உலர் சமவெளிகளின் பல பிரசேதங்களும் அதற்காக ஈடுபடுத்தப்பட்டன. 1930 ஆம் ஆண்டுகளிலிருந்து இப்பிரதேசங்களில் காடு வளர்க்கும் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டன. சில பிரதேசங்களில் தேயிலைத் தோட்டங்கள் கைவிடப்பட்ட நிலங்களில் சமவெளி மீண்டும் உருவாகியுள்ளது.

### (iii) தாழ் நில மேய்ச்சல் நிலம்

தாழ்நிலங்களில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலமானது அவை சார்ந்த காலநிலை வலயங்களுக்கு இணங்க சமதளம் மற்றும் காடு என்பதாக பாகுபடுத்தலாம். சமதளம் என்ற பதம் தாழ்நில ஈரலிப்பு பிரதேசங்களிலுள்ள மேய்ச்சல் நிலங்களுக்கான பயன்பாடாக உள்ளதுடன் உலர் வலயங்களிலுள்ள மேய்ச்சல் நிலமானது சமதளம் என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டும் சேனைப் பயிர்ச் செய்கையின் காரணமாக உருவாகியுள்ளதனால் இவற்றிற்கு பொதுவான ஒரு மூலம் உள்ளது. சேனைப் பயிர்ச்செய்கை செய்ததன் பின்னர் மண்ணின் வினைத்திறன் குறைவடைவதனாலும் கைவிடப்பட்ட நிலங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற காட்டுத் தீ இனாலும் மீண்டும் காடுகள் வளரும் செயற்பாடு தடைப்படுவதனால் மேய்ச்சல் நிலமாக மாற்றமடைகின்றது.

### (iv) சமதளம்

சமதள மேய்ச்சல் நிலமானது களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவற்றில் காணப்படுவது லெடரயிட் மண்ணாகும். பெரும்பாலும் மண் அரிப்பின் காரணமாக மேல் பக்க மண் கழுவிச் சென்றுள்ளதனால் மண் கிரவல்களுடன் மிகவும் பலனற்ற நிலையில் காணப்பட்டது. சமதள பிரதேசங்களில் வளர்கின்ற புற்கள் வகையாக சிலவற்றின் பெயர்கள் ஊாசலளழிழபழடெ ளிஇ ஊலழெனழளெ னுயஉவலடழெ. ஐளஉாயநஅரஅ சரபழளரஅஇ வூநஅநனய வசநஅரடய மற்றும் ஊலஅடிழிழபழடெ யெசனரள என்பனவாகும். பந்துரு, ஆகாஸ்திய வகைகளும் இங்கே உள்ளன. அவை பெரும்பாலும் காணப்படுவதாவது பல ஆண்டுகளாக தீயிலிருந்து தப்பியுள்ள நிலங்களிலாகும். உண்மையாகவே இந்த பந்துரு ஆகாஸ்திய ஆகிய இளந் தாவரங்களின் தொகுதியை சுட்டிக்காட்டுவதுடன் அவ்வாறான பந்துரு சிலவற்றின் பெயர்கள் ஹீன் போவிடியா (முளடிநமலைய யளிநசய) வெரனிய (ர்நனலைழவளை கசரவைைஉழளய) ளுலளலபரைஅ ளுீஇ (முசஉாடயனெசய ளுவசனைரடய) மற்றும் கெகில்ஸ் (னுைஉசயழெிவநசளை டுைநெயசளை) என்பனவாகும். கிருமிகள் உண்ணும் பறவையாகிய பாந்துரா (நேிநவொநள ளி.) சில இடங்களில் வளர்கின்றன.

### (v) காட்டு மேய்ச்சல் நிலங்கள்

காட்டு மேய்ச்சல் நிலமானது வலயத்தின் சில இடங்களில் காணப்படுவதுடன் அதிக அளவில் கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்றன. (உதாரணமாக :- திகாமடுல்ல மற்றும் மட்டக்களப்பு) முதன்மை புல் வகை இலுக் (*Imperata cylindrica*) ஆகும். இதற்கு மேலதிகமாக Cymbopogon nardus மற்றும் Chrysopogon aciculatus முதலியன காணக்கூடியதாக உள்ளன. இந்த மேய்ச்சல் நிலங்களில் cynodon dactylon, Echinocloa Eragrostis tenella, Sporobolus diandrus முதலியன விசேடமாக அதிக அளவில் காணபட்படுகின்றன. மேலும் அஸ்வென்ன, கரல் ஹெப, வரா, ரணவரா, ஹாதாவாரிய, உந்துபியலிய மற்றும் ஆக்கிரமிப்பு பயிர்கள் வகையாக இனங்காணப்பட்ட கந்தபான வகையும் இந்த மேய்ச்சல் நிலங்களில் காணக் கூடியதாக உள்ளது. இந்த வலயத்தின் வனாந்திர சமூகமாக உள்ள உலர் கலப்பு பசுமையான வனாந்திரங்களுடன் ஒப்பிடுகையில் காட்டு மேய்ச்சல் நிலங்களின் மண்ணில் காபன் மற்றும் நைட்ரஜன் உள்ளடக்கம் குறைவாகும். மெக்னீசியம்/ கல்சியம் விகிதமானது அதிக அளவில் உள்ளது.

### (vi) வில்லு மேய்ச்சல் நிலம்

கைவிடப்பட்ட பழைய குளங்கள், பெரிய அளவிலான வில்லு மற்றும் ஆற்றங்கரைகள் போன்ற எப்பொழுதும் ஈரலிப்பான பிரதேசங்களில் வில்லுடனான மேய்ச்சல் நிலங்கள் காணப்படுகின்றன. ஈரலிப்பு அதிகமான மண் வளமுள்ளதாகும். மண்ணில் காபன் ஹைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உள்ளடக்கம் அதிகமாகும். வறட்சிக் காலங்களிலும் மண்ணில் ஈரலிப்புதன்மை காணப்படும் இந்த மேய்ச்சல் நிலமானது மக்களிடம் காணப்படுகின்ற உறுதித்தன்மைக்கு காரணமாக கருத்தில் கொள்ளக் கூடியதானது இவ்வாறான வாசஸ்தலங்களிலும் உள்ள ஈரலிப்புதன்மையாகும். மாதுரு ஓயா, பொலன்னறவை, தமன்கடுவ, மனம்பிடிய போன்ற மஹாவலி ஆற்றின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் பெரிய மஹாவலி ஆற்றின் நீர் வழிந்தோடம் பகுதிகளில் பெரிய அளவிலான வில்லுகள் உள்ளன. இப்பிரதேசம் தொடர்ச்சியாக ஈரலிப்புடனான காடுகள் என்பதனால் வளருகின்ற புற்கள் தடிப்பானவை, நிலத்தில் ஓடுபவை ஈரலிப்புத் தன்மைக்கு கவர்ச்சிகரமான வகைகளாகும். இதிலுள்ள வகைகள் சிலவற்றின் பெயர்கள் Paspalidium, Cynodon புற்கள் மற்றும் பன் வகைகளான fimbristyhs ஆகும்.

### (vii) சவானா மேய்ச்சல் நிலம்

சவானா மேய்ச்சல் நிலமானது மேட்டு நில சவானா மற்றும் தாழ்நில சவானா என்பனவாக இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். தாழ்நிலத்திற்கும் மத்திய நிலத்திற்கும் இடைப்பட்ட வலயத்திலும் உலர் வலயத்திலுமான பகுதிகளை உள்ளடக்கி கடல் மட்டத்திலிருந்து 100 மீற்றர் தொடக்கம் 500 மீற்றர் வரையான உயரத்தில் பாரிய அளவான பிரதேசங்களில் இந்த சவானா மேய்ச்சல் நிலம் பரந்துள்ளது. இதன் விசேட பண்புகளானது மேய்ச்சல் நிலமும் இடத்துக்கு இடம் பரந்து காணப்படும் தாவரங்களுமாகும். பொதுவாக உலர் வலய வனாந்திரமான உலர் பசுமையான வனாந்திரங்களை தொடர்ச்சியாக வெளியாக்கி தீ வைப்பதன் பெறுபேறாக சவானா மேய்ச்சல் நிலம் உருவாகியது என்பது அபிப்பிராயமாக உள்ளது. தொடர்ச்சியாக தீ வைத்தலுக்கு உள்ளாகியுள்ளதனால் பல மரங்கள் அழிவடைந்து தீ இற்கு தாக்குப் பிடிக்கும் பயிர்களும் புல் வகைகளும் மாத்திரம் அச்சூற்றாடலில் மிகுதியாக உள்ளது. புற்களைக் கொண்ட கீழ் பயிர்களுக்கு மத்தியில் பாரிய தனியான விழுந்த மரங்களினதும் சவானா வனப் புதர்களைக் கொண்டுள்ளன. தாவரங்களின் வகைகளான அரளு, புளு, நெல்லி, கஹட, குடும்பேரி, கம்மாலு, தாவு என்பனவாகும். இப்பயிர் வகைகள் அனைத்தும் மருத்துவ நலன்களுடையதாக இருத்தல் விசேட பண்பாகும். பதுளை, பிபில, எல்ல, வெல்லவாய, நில்கல, லுனகல, பலாங்கொடை, கல்லோயா போன்ற பிரதேசங்களில் இந்த வனாந்திரங்களைச் சார்ந்த சுற்றாடல் முறைமையினைக் காணக்கூடியதாக உள்ளது.

மேட்டு நில சவானா ஊவா பீட பூமியில் அதிக அளவில் காணப்படுகின்றது. அதில் சராசரி வருடாந்த மழைவீழ்ச்சி 1400 மி. மீற்றர்களுக்கும் 2000 மில்லி மீற்றர்களுக்கும் இடையில் காணப்படுகின்றது. அவ்வாறே யூன் , ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதத்தின் நடுப்பகுதி வரை உலர் காலநிலை காணப்படுகின்றது. அடிக்கடி தீப்பிடித்தல் மற்றும் நீர் அடித்துச் செல்வதற்கு உட்படுவதன் காரணமாக மண் செழுமையற்றதாக இருத்தல். சவானா மேய்ச்சல் நிலங்களில் இடத்துக்கு இடம் எச்சமாக உள்ள 10 மீற்றர் உயரத்திலான வளர்ந்த புதர்களைக் கொண்ட காடு மற்றும் புல்வெளியில் சிட்ரோனெல்லா மற்றும் மானா போன்ற புல் வகைகளை காணக்கூடியதாக உள்ளது. நிகழ்காலத்தில் சவானா மேய்ச்சல் நிலங்களில் கந்தபான போன்ற (lantana Camara- லண்டானா) ஆக்கிரமிக்கும் புதர் வகைகளான போவிடியா, விஸ்னுகிராந்த, ஹீன் உந்துபியலிய மஹ உந்துபியலிய, எத்அடி, கினிஹிரிய போன்ற மருந்துகளை விசேடமாகக் காணக்கூடியதாக உள்ளது. இங்கே மான்கள், முள்ளம்பன்றிகள், முயல்கள் போன்ற மிருகங்கள் வசிப்பதுடன் வேட்டையாடுபவர்கள் இறைச்சியைக் கொண்ட மிருகங்களை வேட்டையாடுவதற்காகவும் மேய்ச்சல் நிலங்களுக்கு தீ வைத்தலினை மேற்கொள்கின்றார்கள்.

### 2.1.2 மேய்ச்சல் நில இனவிருத்தி முறைமையின் முக்கியத்துவம்

இந்த முறைமையின் முக்கித்துவத்தினை பின்வருமாறு பொழிப்பாக்கி காட்டலாம்.

(i) மேய்ச்சல் நிலம் சார்ந்த சுற்றாடல் முறைமையானது வன சீவராசிகளின் இனவிருத்தியைக் கொண்டிருத்தல் மற்றும் பல உயிரினங்களின் தொடக்க வாசஸ்தலமாக இருத்தல்.

(ii) மேய்ச்சல் நிலங்களில் அதிக அளவானவை பாலூட்டும் மிருகங்களின் வாழ்வுக்கு அத்திவசியமான வன சுற்றாடல் முறைமையாகும்.

(யானைகள், மான்கள், கடம்பை மான்கள், முயல்கள் முதலியன)

(iii) மேய்ச்சல் நில சுற்றாடல் முறைமையினுள் இளஞ்செடிகள் மற்றும் மிருகங்களின் சமநிலைத் தன்மையும் அதன் மண்ணின் தரத்தினையும் பாதுகாக்கின்றது.

(iv) திறந்த நிலப்பிரதேசத்தில் அழகாகக் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்கள் கவர்ச்சிகரமான அழகினைக் கொண்டிருக்கின்றன.

(v) பூமியின் மொத்த நிலலப்பரப்பில் நான்கில் ஒரு பங்கிற்கு அண்மித்த அளவானவற்றில் மேய்ச்சல் நிலம் பரவிக் காணப்படுவதுடன் அது உலகத்தில் உள்ள ஒரு பரந்த அளவான இனவிருத்தி முறைமையாகும்.

(vi) மேய்ச்சல் நிலமானது மனிதர்களுக்கு மிகவும் பிரயோசமான சுற்றாடல் முறைமையாகும்.

### 2.1.3 மேய்ச்சல் நிலங்களை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக காணப்படுகின்ற மட்டுப்பாடுகள்

(i.) பின்வரும் மட்டுப்பாடுகளை இனங்கண்டு கொள்ளலாம்.

(ii.) மேய்ச்சல் நில முகாமைத்துவத்திற்காக போதியளவு சட்ட ஏற்பாடுகளும் கொள்கைகளும் இல்லாமை.

(iii.) தேசிய ஆராய்ச்சி முறைமையினுள் போதியளவு நிதி ஏற்பாடு இல்லாமையினால் மேய்ச்சல் நிலங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் காணப்படல்

(iv.) மேட்டு நிலங்கள் சார்ந்த பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்படல்.

(v.) மேட்டு நிலங்கள் சம்பந்தமாக போதியளவில் நிகழ்கால ஆராய்ச்சித் தகவல்கள்இல்லாமை.

(vi.) கல்விசார் முக்கியத்துவமானது பரந்த அளவில் இனங்காணப்பட்டிருக்காமை

(vii.) வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி ஏற்பாடு போதியளவானதாக இல்லாமை

### 2.1.4 காலநிலை மாற்றங்களினூடாக மேய்ச்சல் நிலங்களுக்கு ஏற்படக்கூய பாதிப்புக்கள்

காலநிலை மாற்றங்களின் மூலம் மேய்ச்சல் நிலங்களின் நிலைபேறான தன்மைக்கு நேரடி தாக்கம் ஏற்படாம். மிகவும் உயர்வான இனவிருத்தியினைக் கொண்ட மேய்ச்சல் நிலங்களை நிலையாக முகாமைத்துவம் செய்வதன் மூலம் கவனம் செலுத்தப்படாமையினூடாக எதிர்காலத்தில் பாலைவனமாக மாற்றமடையலாம் என உலகத்தின் பல்வேறு ஆராய்ச்சி பெறுபேறுகளின் விளைவுகளின் மூலம் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேய்ச்சல் நிலங்களின் மூலம் வனசீரவாசிகள் வதிவிடம், மழைநீர் முகாமைத்துவம், மண் பாதுகாப்பு, மண் காபன்களை களஞ்சியப்படுத்தல், நீரோட்டங்களை மீள் உருவாக்குதல் , வறட்சி காலங்களின் போது நிலக்கீழ் நீரினைப் பாதுகாத்தல், மண்ணின் பௌதீக மற்றும் இரசாயன தன்மைகளை மேம்படுத்தல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்ற போதிலும் காலநிலை மாற்றங்களின் மூலம் இச்சேவைகள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளடக்கலாம். காலநிலை மாற்றங்களின் மூலம் நீண்டகால வறட்சி ஏற்படலாம் என எதிர்வு கூறப்படலாம். எனவே அவ்வாறான காலங்களில் தீப்பிடிப்பதற்கு உள்ளாகுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன. இந்த மாற்றங்களுக்கு ஏற்படக்கூடிய பிரதிச் செயலின் தாக்கம் நிச்சமற்றதாக இருந்த போதிலும் முக்கியத்துவமளிக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டது.

### 2.1.5 மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாத்தலும் மேய்ச்சல் நிலங்களை பேணிப் பர்தகாக்கும் நடைமுறைகளும்

மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல் என்பது தவறான பயன்பாட்டிற்கு உள்ளாகியுள்ள அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மேய்ச்சல் நிலங்களை பாதுகாப்பதற்கு அல்லது மேமம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலாகும். அப்பிரதேசங்களிலேயே குடியிருந்து மேற்பார்வை செய்து அந்நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அத்தியவசியமானதாகும்.

ஐக்கிய நாடுகளின் விவசாய திணைக்களத்தின் இயற்கை வளங்களை பேணிப்பாதுகாக்கும் சேவையின் மூலம் நிலைத்திருப்பதற்காக மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாக்கும் நடைமுறைகளில் சில பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

- நுழைவுக்கட்டுப்பாடு- Access Control
- புதர்களை முகாமைத்துவம் செய்தல் - Brush Management
- வேலிகளை ஸ்தாபித்தல்- Stabilizing Fence
- உணவு அறுவடை முகாமைத்துவம்- Forage Harvest Management
- தரம் ஸ்தாபித்தல் கட்டமைப்பு – Grade Stabilization Structure
- அதிக அளவில் பயன்படுத்தும் பிரதேசங்களை பாதுகாத்தல்- Heavy Use Protection Area
- ஊட்டச்சத்து முகாமைத்துவம்- Nutrient Management
- புல்தரை மற்றும் உலர்ந்த புற்களை நடுதல்- Pasture and Hay Planting
- கிருமினாசினி முகாமைத்துவம்- Pest Management
- பரிந்துரைக்கப்பட்ட எரியூட்டல்- Prescribed Burning
- பரிந்துரைக்கப்பட்ட புல் மேயவிடுதல்- Prescribed Grazing
- ஆற்றங்கரை வன ஒதுக்கிடம் Riparian Forest Buffer
- நீர்க் கிணறு- Water Well
- நீர்ப்பாய்ச்சுதல் வசதிகள்- -Watering Facility
- வனசீவராசிகள் வதிவிட முகாமைத்துவம்- Wildlife Habitat Management
- காற்றுத் தடை/ கூடாரம் ஸ்தாபித்தல்- Wind Break/ Shelterbelt Establishment
- புல்வெளி நிலையினை குறியிடல் - Pasture Condition Score
- தீக்காப்பு பட்டியை ஸ்தாபித்து பேணுதல்.

### 2.1.6 மேய்ச்சல் நிலம் அதிக அளவில் காணப்படும் இலங்கையின் தேசிய பூங்காக்கள்

காட்டு மீருகங்கள் மற்றும் தாவரங்களை பாதுகாத்தல் கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அத்தியாயம்) 2(1)(ஆ) பிரிவின் பிரகாரம் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பணிப்புரையின் வாயிலாக அரசாங்கத்தின் ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட நிலப்பிரதேசத்தினை இக்கட்டளைச் சட்டத்தின் செயற்பாடுகளுக்காக தேசிய சரணாலயமாக வெளியிடலாம் என்பதுடன் அதே பணிப்புரையின் வாயிலாக அல்லது பின்னர் வர்த்தமானியில் வெயிடப்படுகின்ற பணிப்புரையின் வாயிலாக மேற்கூறிய தேசிய சரணாலயத்தினை முழுமையாக அல்லது அதில் ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட பகுதியினை தேசிய சரணாலயமாக வெளியிடலாம். அவ்வாறு வெளியிடப்பட்ட 26 தேசிய பூங்காக்கள் கணக்காய்வுத் திகதியில் காணப்படுவதுடன் அதன் மூலம் 5,734 சதுர கிலோ மீற்றர்களுக்கு அண்மித்த அளவானவை உள்ளடக்கப்படுகின்றது. இதற்கு மத்தியில் மேய்ச்சல் நிலங்கள் அதிக அளவில் காணப்படுகின்ற சில தேசிய பூங்காக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

#### (அ) ஹோட்டன் சமவெளி

மிகவும் உயர்வான இனவிருத்தியுள்ள மேகங்கள் மூடியுள்ள அழகான மலைத்தொடர்கள் சுற்றியுள்ள அதிக உயரத்திலுள்ள சமமான நிலமே ஹோட்டன் சமவெளியாகும். இலங்கையின் ஆளுனராக சேவையாற்றிய பிரித்தானியரான ரொபேட் ஹோட்டன் அவர்களின் பெயரில் ஹோட்டன் சமவெளியாக பெயரிடப்பட்டுள்ளதுடன் 1969 திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி ஹோட்டன் சமவெளி இயற்கையான சரணாலயமாகவும் 1988 மார்ச் மாதம் 16 ஆந் திகதி தேசிய பூங்காவாகவும் மாற்றப்பட்டு வனசீவராசிகள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் உலக மரபுரிமை இணக்கப்பாட்டினால் ஹோட்டன் சமவெளியானது உலக மரபுரிமையாக 2010 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 02 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

வருடாந்த மமழைவீழ்ச்சி 2500 மில்லி மீற்றர் அளவான வனம் என்பதுடன் கடல் மட்டத்திலிருந்து 1800 மீற்றருக்கும் 2300 மீற்றருக்கும் இடைப்பட்ட உயரத்தில் ஹோட்டன் சமவெளி அமைந்துள்ளது. 3160 ஹெக்டயர் நிலப் பகுதியில் அமைந்துள்ள இந்த தேசிய பூங்காவின் வடக்கு பகுதியில் தொடுபல மலையும் அதன் மேற்கு பகுதியில் கிரிகல்பொத மலையும் அமைந்துள்ளது. இலங்கையின் பிரதான ஆறுகளுக்கு மத்தியில் வளவ மற்றும் களணி ஆறுகளும் பவந்தலா ஓயா, அகார ஓயா என்பனவும் ஆரம்பிப்பது ஹோட்டன் சமவெளியிலிருந்தாகும்.

**(i) ஹோட்டன் சமவெளிக்குரிய மேய்ச்சல் நிலம்**

வகைப்படுத்தலுக்கு இணங்க ஈரலிப்பு சமவெளி மேய்ச்சல் நில வகைக்குரிய ஹோட்டன் சமவெளியின் மொத்த நிலப்பகுதி 3,160 ஹெக்டயர்களாக உள்ளதுடன் அவற்றில் அண்ணளவாக 500 ஹெக்டயர்களுக்கு மேற்பட்டவை மேய்ச்சல் நிலமாகவும் அல்லாதுவிடின் மொத்த நிலப் பிரதேசத்தில் 75% வனாந்தரமாகவும் 25% மேய்ச்சல் நிலமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. மேய்ச்சல் நிலத்தின் அளவு தனியாக அளவை செய்யப்பட்டு ஹெக்டயர் அளவு தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. இந்த நிலத்தின் உயர்ந்த மலைகளிலும் உயர்நத சரிவுகளிலும் மேய்ச்சல் நிலங்கள் காணப்படுகின்றன. இதில் 03 வகையான புற்கள் காணப்படுகின்றன. அதாவது மஹதுத்திரி, கவர மற்றும் இனங்காணப்படாத ஒரு புல்வகை என்பனவாகும்.

ஹோட்டன் சமவெளி இயற்கை சரணாலயம், தேசிய பூங்கா மற்றும் உலக மரபுரிமையாக பெயரிடப்பட்டதானது இது பெறுமதியுள்ள விசேட சுற்றாடல் முறைமையினை பூரணப்படுத்தியுள்ளதனாலாகும்.

(A Nature guide to the world's end trail Horton Plains நூல் மூலம்)

**(ii) மேய்ச்சல் நிலம் சார்ந்த மண்**

ஹோட்டன் சமவெளியில் உள்ள மேய்ச்சல் நிலத்திற்குரிய மண் 04 படலங்களை உள்ளடக்கியிருந்ததுடன் மேலாக உள்ள மண் படலமானது கறுப்பு நிறத்தினை கொண்டுள்ளதுடன் அதற்கான காரணம் மக்கிய மண் மற்றும் இந்த மேய்ச்சல் நிலம் அடிக்கடி தீ வைப்பதற்கு உள்ளாகியதனால் ஏற்பட்ட கறுப்பு நிறமாகியமை தாக்கமளித்துள்ளது. இப்புற்களின் வேர்களின் கறுப்பு நிறம் மண் படலம் வரை மாத்திரம் பரவியுள்ளதுடன் அதன் பின்னர் கல் உடனான மண் படலமானது அதன் கீழே மஞ்சல் நிற மண் படலம் மற்றும் இறுதியாக பழுப்பு நிற மண் படலம் உள்ளது. இப்புதர்களின் வேர்கள் பரந்துள்ளதனால் மண்ணில் ஈரலிப்புத் தன்மை காணப்படுவதுடன் மண் அரிப்பினையும் தவிர்க்கின்றது.

ஹோட்டன் சமவெளியின் சுட்டிக்காட்டப்படும் பண்புகளானது வனாந்திரமும் மேய்ச்சல் நிலமும் ஒன்றாக இல்லாது தனியாக அமைந்திருப்பதாகும். இதற்கு காரணமாக மட்கிய மண் படையானது மேய்ச்சல் நிலங்களுக்கு மட்டுப்பாடாக உள்ளதுடன் வனாந்திரங்களுக்கு (Forest) உள்வருவதற்கு இடமளிக்காமை என அறிக்கையிடப்பட்டுள்ளது. (Pearson Report 1899- பக்கம் 66)

(iii) ஹோட்டன் மேய்ச்சல் நிலத்திற்கான பாரம்பரிய பயிர் வகை

அதிக இனவிருத்தியுள்ள இந்த நிலத்தின் இலங்கைக்கான பாரம்பரியமான பயிர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதுடன் அவற்றில் மேய்ச்சல் நிலங்களுக்கான பாரம்பரியமான பயிர்களில் சில கீழே தரப்படுகின்றன.

- பூவரசு (Rhododendron Arboreum)
- சுது பிதர (Exacun Walkeri)
- வல் வெனிவெல்
- வெல் கபுரு (Gaultheria Rudis)
- கெகடிய (Aponogeton Jacobsenii)
- வல்ரோசா
- கொக்மொட (Eriocaulon S.P)
- ஹய்சின்த் ஓகிட் (Satyrium Nepalense)
- ஹீன் போவிடியா (Osveckia Wightiana)
- குடா சதுன் (Anathalis S.P)
- மஹசுதனா (Anaphalis Brepifolius)
- கொடுபொல (Centela Asiatica)
- வல்எத்தரு (Bupleurum Wighti)
- கொகெட்மினொட்(Cynogiossun Furcatun)
- பெங்கிரிமான (Cymvopogon Nardus)
- சீதா பேர (Rhodomyrtus Tomemtosa)
- கெகில்ல(Dicranopteris Linearis)
- கிடாரம் (Arisaema Leschenaultii)

(iv) **ஹோடன் சமவெளியிலுள்ள புல் வகைகள்**

இச்சமவெளியின் காணிகளில் அதிக அளவானவை முன்னைய காலத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் சுற்றாடல் பாதுகாப்பிற்காக இப்பயிர்ச் செய்கை நிறுத்தப்பட்டு பின்னர் 19 ஆம் நூற்றாண்டில் மத்திய மலை நாட்டில் அமைந்துள்ள கால்நடை பண்ணைகளுக்காக ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட 03 புல் வகைகள் இந்த மேய்ச்சல் நிலத்தில் காணப்படுகின்றன.

கவர, துன்திரி மற்றும் இனங்காணப்படாத ஒரு புல் வகையாகக் காட்டப்பட்டுள்ளது. (A Nature guide to the world’s end trail Horton Plains, C.V.S.Gunethilake) மற்றும் கையேடு மூலம்

- *Garnotia Exaristata* – துன்திரி- மேய்ச்சல் நிலங்களின் நீரோடைகளுக்கு அண்மையில் அதிக அளவில் காணப்படுகின்றன.
- *Chrysopogon Zeylanicus* – கவர- உயரத்தில் வளருகின்ற மேய்ச்சல் நிலங்களின் முதன்மை புல் வகையாகும்.
- இனங்காணப்படாத புல் வகை

இந்த நிலத்தில் நீர் நிலைகளை சார்ந்து வளருகின்ற குருஉன (*Sinarundinaria densifolia)* பயிர்கள் இதில் உள்ள நீர் வளத்தினை பாதுகாப்பதற்கு பெறுமதிமிக்க முயற்சிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் ஹோடன் சமவெளிக்கு மாத்திரம் பாரம்பரியமான பயிராகும். இலங்கையில் உள்ள மிகவும் குறுகிய மூங்கில் வகையான இது குள்ளமான மூங்கில் என்பதுடன் கடம்பை மான்கள் இதன் இளம் தண்டுகளை சாப்பிடுவதற்கு மிகவும் விருப்பமாக உள்ளன.

### (v) ஹோடன் சமவெளிக்கு பாரம்பரியமான மிருகங்கள்

ஹோடன் சமவெளி தேசிய பூங்காவில் அதிகளவான மிருகங்களை காண முடியாதிருந்த போதிலும் மிகவும் அருமையாக வளருகின்ற கடம்பை மான்கள் புலிகள், ஊதாமுக குரங்குகள், புள்ளி மான்கள், மர அணில்கள், வரிப் புலிகள், காட்டுப் பன்றிகள் முயல்கள் முதலிய மிருகங்களை காணக்கூடியதாக இருந்ததுடன் இலங்கைக்கு பாரம்பரியமான ஊதா முகக் குரங்குகள் முக்கிய இடம் வகிக்கின்றது.

02 வகையான உள்நாட்டு குருவிகள் மற்றும் 11 வகையான புலம் பெயர் குருவிகள் இந்த பூங்காவில் காணக்கூடியதாக உள்ளது எனவும் பாரம்பரியமான பறவைகளுக்கு மத்தியில் கொண்டை குருவி, இலங்கை சிதசியா, இலங்கை அரங்கயா, அந்துரு நில்மெசி மாரா என்பன விசேடத்துவமானது என அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் வந்த வீ என்ற வகையான 34 பறவைகளில் 17 வகையான பறவைகளை இந்த தேசிய பூங்காவில் காணக்கூடியதாக உள்ளது. இந்த தேசிய பூங்காக்கள் உள்நாட்டு வண்ணாத்துப்பூச்சிகளுக்காகவும் மிகவும் பொருத்தமான இயற்கை வதிவிடமாகும். பயிஸ் பூஸ்வெட் பறவைகள் புதர்களில் கூடு தயாரிக்கும் பறவைகளாக உள்ளதுடன் லே மெடில்லா என்ற விசமற்ற பாம்பு விசேடமாக இந்த மேய்ச்சல் நிலத்திகு பாரம்பரியமான பாம்பாகும்.

### (vi) ஹோட்டன் சமவெளியின் அழகினை அதிகரிக்கும் கடம்பை மான்கள்

ஹோட்டன் சமவெளியானது அழகு மற்றும் அமைவிடத்துடன் இணைந்து காணப்படுகின்ற சுற்றுலா கவர்ச்சியை வெற்றிகொண்ட கால்நடை பிரிவான கடவை மான்கள் இந்த மேய்ச்சல் நிலத்தில் காணப்படுவதனை முன்னிட்டு பாதுகாத்தல் மிகவும் முக்கியத்துவமானதாக உள்ளதுடன் கடவை மான்கள் இருப்பதனை முன்னிட்டு இந்த மேய்ச்சல் நிலம் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும். இந்த தேசிய பூங்காவின் வருடாந்த வருமானம் அண்ணளவாக ரூபா 400 இலட்சமாக உள்ளதுடன் அது வனசீவராசிகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக அதிக

அளவு பங்களிப்பினை வழங்குவதனால் இத்தேசிய பூங்காவினை சிறந்த முகாமைத்துவத்துடன் பராமரித்தல் அரசாங்கத்தினதும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினதும் பொறுப்பாகும்.

### (ஆ) மின்னேரியா தேசிய பூங்கா

1997 ஆகஸ்ட் மாதம் 12 ஆந் தகிதி 988/4 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் மின்னேரியா தேசிய பூங்காவாக வெளியிடப்பட்டிருந்தது. வடமத்திய மாகாணத்தின் பொலன்னறுவை மாவட்டத்தின் 8,889 ஹெக்டெயர்களைக் கொண்ட இந்த தேசிய பூங்காவானது அதிக அளவான காட்டு யானைகளை ஒரே தடவையில் பார்வையிடக்கூடிய இயற்கை அழகினைக் கொண்ட தேசிய பூங்காவாக நன்கு அறியப்பட்டதாகும்.

#### i. மினனேரிய தேசிய பூங்காவில் வசிக்கின்ற பயிர்களை உண்ணுகின்ற மிருகங்கள் மற்றும் மேய்ச்சல் நிலத்தின் அளவு

மின்னேரியா தேசிய பூங்காவில் புற்களை உணவாகக் கொளளும் உயிரினங்களின் வகைகள் மற்றும் உயிரினங்களின் எண்ணிக்கைகள் அண்ணளவாக கீழே காட்டப்பட்டுள்ளதுடன் யானைகள் , மான்கள், கடவை மான்கள், முயல்கள், வீடு சார்ந்த மாடுகள், பசுமாடுகள், எருமை மாடுகள் என்பன இவற்றிற்கு மத்தியில் உள்ளன.

**அட்டவணை இலக்கம் - 01 மின்னேரியா தேசிய பூங்காவில் புல்லை உணவாகக் கொள்ளுகின்ற உயிரினங்களின் வகைகள்**

| புல்லை உணவாகக் கொள்ளும் உயிரினங்களின் வகைகள் | உயிரினங்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) |
|---|---|
| யானைகள் | 500- 750 இற்கு மேல் |
| மான்கள் | 1000 இற்கு மேல் |
| கடவை மான்கள் | 400 இற்கு மேல் |
| முயல்கள் | 1000 இற்கு மேல் |
| எருமை மாடுகள்/ பசுமாடுகள் | 500-750 இற்கு இடைப்பட்ட அளவு |

**(பூங்கா பொறுப்பாளர்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள்)**

மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் மின்னேரியா தேசிய பூங்காவில் உயிர்வாழ்கின்ற பிரதான உணவாக புற்களை எடுத்துக்கொள்ளும் மிருகங்களின் எண்ணிக்கை மிகவும் அதிக அளவில் உள்ளதுடன் மொத்த நிலப் பகுதி 8,889 ஹெக்டயர்களின் மேய்ச்சல் நிலத்தைக் கொண்ட பிரதேசம் அண்ணளவாக 1,210 ஹெக்டயர்கள் மாத்திரமாகும். விபரம் பின்வருமாறாகும்.

**அட்டவணை இலக்கம் -02 மின்னேரியா தேசிய பூங்காவின் மேய்ச்சல் நில விரிவாக்கம்**

| **மேய்ச்சல் நிலம் அமைந்துள்ள இடம்** | **அளவு அண்ணளவாக (ஹெக்டயர்கள்)** |
|---|---|
| மினேரியா குளத்து மைதானம் | 1,000 |
| பெரிய மைதானம் | 20 |
| வேரபிடிய | 10 |
| பூங்கா வீதி | 100 |
| மூங்கில் மைதானம் | 20 |
| மின்சாரக் கம்பி வீதி | 10 |
| சிறிய மேய்ச்சல் நிலம் | 50 |
| | 1,210 |

**(பூங்கா பெறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள்)**

**(இ) கவுடுல்ல தேசிய பூங்கா**

வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள கவுடுல்ல தேசிய பூங்கா 2002 ஏப்ரல் 01 ஆந் திகதிய 1230/5 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் தேசிய பூங்காவாக வெளியிடப்பட்டிருந்தது. 6,656 ஹெக்டயர் முழுவதும் பரவியுள்ள இந்தா தேசிய பூங்காவினுள் யானைக் கூட்டங்கள் மற்றும் அவற்றின் அழகான செயற்பாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. மான்கள், கடவை மான்கள், மற்றும் பல்வேறு பறவைகள் வசிக்கும் இயற்கை அழகினைக் கொண்ட தேசிய பூங்காவாகும்.

**அட்டவணை இலக்கம் - 03 கவுடுல்ல தேசிய பூங்காவினல் வசிக்கும் புற்களை உணவாகக் கொள்ளும் மிருகங்கள்**

| **புல்லை உணவாகக் கொள்ளும் மிருகங்களின் வகை** | **தொகை( அண்ணளவாக)** |
|---|---|
| யானை | 400 இற்கு மேல் |
| மான் | 100 இற்கு மேல் |
| கடவை மான் | 100 இற்கு மேல் |
| புள்ளி மான் | 100 இற்கு மேல் |
| மனைசார்ந்த மாடுகள் | 1,500 அளவானவை |

**(பூங்கா பொறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள்)**

**அட்டவணை இலக்கம் - 04 கவுடுல்ல தேசசிய பூங்காவின் மேய்ச்சல் நில விரிவாக்கம்**

| **மேய்ச்சல் நிலம் அமைந்துள்ள இடம்** | **அளவு அண்ணளவாக (ஹெக்டயர்கள்)** |
|---|---|
| நீர்த் தேக்கத்தின் குளத்து மைதானம் | 1,000 |
| பூங்காவினுள் | 80 |
| | ----------- |
| | 1,080 |
| | ------------ |

**(பூங்கா பொறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள்)**

மேலுள்ள குறிப்புக்களின் பிரகாரம் கடுவுல்ல தேசிய பூங்காவினுள் வசிக்கிற்ன புல்லை உணவாகக் கொள்ளும் மிருகங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளதுடன் மொத்த நிலப்பகுதி 6,900 ஹெக்டயர்களில் மேய்ச்சல் நிலங்களுக்குரியது 1,080 ஹெக்டயர்கள் மாத்திரமாகும். அதாவது 16 சதவீதத்திற்கு அண்மித்த அளவாகும்.

**(ஈ) கலாவெவ தேசிய பூங்கா**

கலாவெவ தேசிய புங்கா வடமத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன் 2,015 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதம் 17 ஆந் திகதி நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் திறக்கப்பட்டது என தேசிய பூங்காவினுள் அமைந்துள்ள பெயர்ப்பலகையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அண்ணளவாக 5,044.97 ஹெக்டயர் முழுவதும் பரவியுள்ள இந்த தேசிய பூங்காவின் விசேடத்துவமானது வறட்சிக் காலத்தில் புலம்பெயரும் அதிக அளவான யானைகள் கூடுவதலானாலாகும். 2018 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தின் வன சீவராசிகள் உத்தியோகத்தரினால் மேற்கொண்ட உத்தியோகபூர்வமற்ற தொகை மதிப்பின் பிரகாரம் 04 யானைக் கூட்டங்கள் உள்ளது எனவும் அவற்றில் பாரிய அளவிலான 22 கொம்பன் யானைகளும் சிறிய 26 கொம்பன் யானைகளும் உள்ளன. என அவதானிக்கப்பட்டது. அவ்வாறே Tuskers of Kalawawa National Park என்ற பெயரிலான புத்தகத்தில் கலாவெவ தேசிய பூங்காவில் இருக்கின்ற 18 யானைகளின் புகைப் படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கையில் கொம்பன் யானைகள் இருப்பது 7 சதவீதம் மாத்திரம் எனவும் அதிக அளவான கொம்பன் யானைகள் வசிப்பது கலாவெவ தேசிய பூங்காவில் எஉனவும் இனங்காணப்பட்டிருந்தது. அதிக வறட்சிக் காலத்தில் நீர் வற்றிய குளங்களின் மைதானங்களில் இளம் புற்பகள் உருவாகின்ற காலத்தில் இவ்வாறான உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு யானைகள் அதிக அளவில் ஒன்று சேர்வது அவற்றின் இயற்கையாக அசையும் போக்கின் ஒரு அங்கமாக உள்ளது. ஏப்ரல் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் 150-350 அளவான யானைகள் இருப்பதாகவும் கலாவெவ குளத்த பூங்காவினுள் நிரந்தரமாக வசிக்கின்ற 50-75 இற்கும் இடைப்பட்ட அளவிலான யானைகள் இருக்கின்றது எனவும் கலாவெவவிற்கு அருகாமையிலுள்ள வன முறைமையினுள் இந்த யானைகள் ஒன்றுக்கொன்று சமீபமாக ஒரு குழுவாக நடமாடுவதாகவும் அவை வரட்சிக் காலத்தினைப் போல சில வேளைகளில் ஆண்டு முழுவதும் இந்த வனாந்திரத்தில் நடமாடுவதாகவும் அவதானிக்கப்பட்டது. மழைக்காலம் ஆரம்பிப்பதோடு புலம்பெயரும் காட்ட யானைகள் இந்த நிலத்திலிருந்து விலகிச் செல்வதுடன் நிரந்தரமாக வசிக்கின்ற யானைகள் இங்கேயே தங்கியிருக்கின்றன என அறிவிக்கப்படுகின்றது. கலாவெவ தேசிய பூங்கா பாதுகாக்க வேண்டிய கொம்பன் யானைகள் பல இருக்கின்ற மிகவும் அழகான சுற்றாடலில் அமைந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சியை மிகவும் இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய பெறுமதியான தேசிய பூங்காவினைப் போல யானைகளின் சொர்க்கபுரி என நன்கு அறிந்துகொள்ளப்பட்டுள்ளது.

**(உ) லுனுகம வெஹர தேசிய பூங்கா**

1995 திசெம்பர் 08 ஆந் திகதிய 900/1 ஆம் இலக்க மற்றும் 2009 யூலை 13 ஆந் திகதிய 1610/06 ஆம் இலக்க அதிவிசேட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட லுனுகம்வெஹர தேசிய பூங்காவிற்கு ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் வெல்லவாய, தனமல்வில, கதிர்காமம், புத்தள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹர பிரதேச செயலகம் பிரிவில் அமைந்துள்ள 27,185.85 ஹெக்டயர் அளவினை உள்ளடக்கிய

பிரதேசத்திற்குரியதாகும். யானைகள், மான்கள், முயல்கள், கடம்பை மான்கள் போன்ற புல் மேயும் 100 இற்கு மேற்பட்ட மிருகங்கள் வசிக்கும் இந்த தேசிய பூங்கா சுற்றுலாப் பயணிகளுக்கு மத்தியில் பிரசித்திபெற்றுள்ளதானது அதிக எண்ணிக்கையான யானைகளை பார்க்ககூடிய இடமாக இருப்பதினாலாகும்.

**(ஊ) குமன தேசிய பூங்கா**

அம்பாறை மாவட்டத்தின் யால கிழக்குப் பகுதியை சேர்ந்த குமன தேசிய பூங்கா 2006 யூன் 05 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன் நில அளவு 35,664 ஹெக்டயர் முழுவதும் பரந்துள்ளது. குமன தேசிய பூங்கா சுற்றுலா பறவைகளின் சொர்க்கபுரியாக சுற்றுலா பயணிகளுக்கு மத்தியில் பிரசித்திபெற்றிருந்ததுடன் அண்ணளவாக பயிர்களை உண்ணும் மிருகங்களான 6,000 மான்கள், 2,500 காட்டு மாடுகள், 50 யானைகள் அளவில் இத்தேசிய பூங்காவில் வசிக்கின்றது என பூங்கா பொறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் பிரகாரம் அறிவிக்கப்பட்டது.

**(எ) லாகுகல தேசிய பூங்கா**

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த தேசிய பூங்கா 2006 யூலை 20 ஆந் திகதி லாகுகல தேசிய பூங்கா என மாற்றப்பட்டது. நில அளவு 5,131 ஹெக்டயர்களாகும். யானைகளின் இராஜதானியாகவும் அவற்றினை பார்வையிடுவதற்கு பொருத்தமான ஒரு இடமாகவும் இப்பூங்கா பிரசித்திபெற்றுள்ளதுடன் இத்தேசிய பூங்காவில் வசிக்கின்ற மிருகங்களுக்கு மத்தியில் பயிர்களை உண்ணுகின்ற மிருகங்களான யானைகள் 75-100, மான்கள் 50-75, முயல்கள் 75-100, கடம்பை மான்கள் 30-50 இடைப்பட்ட எண்ணிக்கையில் வசிக்கிற்னது என பூங்கா பொறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டது.

**(ஏ) ஹொரவ்பதான தேசிய பூங்கா**

வடமத்திய மாகாணத்தில் அமைந்துள்ள 23 ஆவது தேசிய பூங்கா ஹொரவ்பதான தேசிய பூங்காவாகும். 2,570 சதுர கிலோ மீற்றர் அளவில் அமைந்துள்ள 2011 திசெம்பர் 06 ஆந் திகதி வர்த்தமானி இலக்கம் 1735/21 இன் மூலம் தேசிய பூங்காவாக வெளியிடப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் போது இலங்கையின் முதலாவது யானைகளை நிறுத்திவைக்கும் பூங்கா ((EHG- Elephant Holding Ground)) இந்தபூங்காவில் அமைந்துள்ளதுடன் கொள்லளலவானது 40 யானைகளுக்கு அண்மித்த அளவாகும். 2012 மார்ச் 17 ஆந் திகதிய 12/0151/549/001 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மேற்கூறிய தேவைப்பாடு வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ரூபா 345 மில்லியன் செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட யானைகள் நிறுத்திவைக்கும் பூங்கா 2015 ஆம் ஆண்டின் போது திறக்கப்பட்டது.

**(ஐ) வில்பத்து தேசிய பூங்கா**

இலங்கையின் பழைய வனசீவராசிகள் சரணாலயத்திற்கு மத்தியில் மிகவும் முக்கியமான தேசிய பூங்காவாக வில்பத்து தேசிய பூங்கா இனங்காணப்பட்டுள்ளது. தொடக்கத்தில் சீமாட்டி புலம்பெயர்வு இடம்பெற்ற இடமாக நன்கு தெரியப்பட்டுள்ளதுடன் பழைய குடியிருப்புக்களின் எச்சங்களினூடாக அது பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது என அறிக்கையிடப்பட்டுள்ளது. இயற்கையாக அமைந்த பல வில்லுகள் உள்ளதனால் வில்பத்து என்ற பெயர் உருவாகியுள்ளதுடன் பரந்த வீச்சில் இந்த வில்லுகளைக் காணக்கூடியதாக உள்ளது. வில்பத்து தேசிய பூங்கா 1938 பெப்ரவரி 25 ஆந் திகதி தேசிய பூங்காவாக வெளியிடப்பட்டிருந்ததுடன் 131,667.7 ஹெக்டயர் பரப்பளவினைக் கொண்டுள்ளது.

அனுராதபுரம் புத்தளம், மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்கள் வரையும் பரந்துள்ள தேசிய பூங்கா இலங்கையின் பெரிய பூங்காவாகும். பூங்காவின் வடக்கு பிரதேசத்திற்கான எல்லை மல்வத்து ஓயா மற்றும் மோதரகம ஆறும் தெற்கு பிரதேசத்திற்கான எல்லை கலாஓயாவும் அமைந்துள்ளது. சமவெளியான நிலத்தைக் கொண்ட வில்பத்து தேசிய பூங்கா காட்டு மிருகங்களின் வசிப்பிடத்திற்கு அற்புதமான நில மேற்பரப்பு உருவாகியிருந்தது. நிலம் மற்றும் வனாந்திரம், கால்வாய், ஓடை, வில்லு, குளங்கள் சார்ந்த நீர்ச் சுற்றாடலுடனான இந்த தேசிய பூங்காவானது பார்ப்பவர்களின் மனதை வெற்றிகொள்ளும் கவர்ச்சிகரமான சுற்றாடலினைக் கொண்டுள்ளது.

**(ஒ) அம்பாறை சரணாலயம்**

அம்பாறை சரணாலயமானது 1954 இன் பெப்ரவரி 12 ஆந் திகதி 10/640 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் புனித பூமியாக வெளியிடப்பட்டிருந்தது.

**(ஓ) புத்தங்கல சரணாலயம்**

புத்தங்கல சரணாலயமானது 1974 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 01 ஆந் திகதி 136 ஆம் இலக்க வர்த்தமபனியின் மூலம் சரணாலயமாக வெளியிடப்பட்டிருந்தது.

மாதுரு ஓயா மற்றும் கல்ஓயா நீர்த்தேக்கங்களின் ஊடாக யானை வழிகளின் மூலம் காட்டு யானைகள் அம்பாறை மற்றும் புத்தங்கல சரணாலயத்திற்கு புலம்பெயர்வு போக்கிற்கு இணங்க புலம் பெயர்வதுடன் அம்பாறை சரணாலயத்தினூடாக புத்தங்கல, சரணாலயத்திற்கு அவைகளின் இயற்கையான புலம்பெயர்வு இடம்பெறுவதுடன் இந்த இரண்டு சரணாலயங்களும் யானைகளின் தற்காலிக வதிவிடங்களாகும். அக்காலப்பகுதியில் 180 எண்ணிக்கையான யானைகள் இந்த புனித பூமிக்குள் தங்கி இருப்பதாக வெளியிடப்பட்டது.

### 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 2.3 கணக்காய்வின் குறிக்கோள்கள்

#### 2.3.1 கணக்காய்வின் குறிக்கோள்கள்

இலங்கையின் தேசிய பூங்காக்களில் மேய்ச்சல் நிலங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக அரசாங்கத் துறையின் பங்களிப்பினை மதிப்பீடு செய்தல்.

#### 2.3.2 கணக்காய்வின் உப குறிக்கோள்கள்

(i) சட்டரீதியான பின்னணியை பரீட்சித்தல்

(ii) பௌதீக மற்றும் நிதிசார் எற்பாடுகளின் போதியளவான தன்மையை மதிப்பீடு செய்தல்

(iii) நிகழ்காலத்தில் முகங்கொடுக்கின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல்

### 2.4 கணக்காய்விற்கான அனுகுமுறைகள்

(அ) இலங்கையின் தேசிய பூங்காக்களில் அமைந்துள்ள மேய்ச்சல் நிலங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக அவை தொடர்பாக உருவாகியுள்ள அச்சுறுத்தல்களை புரிந்துகொள்ளல் மற்றும் அவை தொடர்பாக கவனம் செலுத்தும் முக்கியத்துவத்தினை வலியுறுத்துதல்.

(ஆ) இலங்கையின் தேசிய பூங்காக்களில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்கள் நிலைத்திருப்பதனை முன்னிட்டு காணப்படுகின்ற அச்சுறுத்தல்கள் படிப்படியாக அதிகரித்தல் மற்றும் அவை தொடர்பாக அதிக கவனம் செலுத்தாமையின் காரணமாக உருவாகியுள்ள சுற்றாடல் பிரச்சினைகள், உப பிரச்சினைகள் மற்றும் அதற்கு அடிப்படையாக அமைகின்ற இனங்காணப்பட்ட காரணங்களை கலந்துரையாடுதல் இக்கணக்காய்வின் அடிப்படையாகும்.

### 2.5 கணக்காய்வு விடயப்பரப்பும் விடயப்பரப்பிற்கான மட்டுப்பாடுகளும்.

#### 2.5.1 சர்வதேச நியமங்களுடன் இணங்கியிருத்தல்

உச்ச கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 5110- ISSAI 5140) இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

#### 2.5.2 கணக்காய்வு விடயப்பரப்பு

வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் இலங்கையின் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டள்ள நடவடிக்கைகளின் பரீட்சிப்பின் போது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 26 தேசிய பூங்காக்களுக்கு மத்தியில் ஹோட்டன் சமவெளி, மின்னேரியா, கவுடுல்ல, கலாவெவ, லுனுகம்வெஹர, குமன, லாகுகல, ஹொறவ்பதான, வில்பத்து ஆகிய புனித பூமிகளிலும் ஆகிய தேசிய பூங்காக்களில் மற்றும் புத்தங்கல, அம்பாறை ஆகிய சரணாலயங்களின் இயற்கையான மேய்ச்சல் நிலங்களுடனான இடங்கள் சம்பந்தமான நிகழ்கால நிலைமை மற்றும் அவற்றினை பாதுகாப்பது சம்பந்தமாக எடுக்கப்பட்டள்ள நடவடிக்கைகளைப் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இலங்கையின் தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களை பாதுகாக்கும் நடைமுறை தொடர்பான சட்டரீதியான பின்னணியை பரீட்சித்தல், பௌதீக மற்றும் நிதிரீதியான ஏற்பாடுகளின் போதியதன்மையை மதிப்பீடு செய்தல், நிகழ்காலத்தில் முகங்கொடுக்கின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தல் தொடர்பாகவும் பரீட்சிக்கப்பட்டது.

#### 2.5.3 விடயப்பரப்பின் மட்டுப்பாடுகள்

(அ) இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினர்களால் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் போது அவற்றிற்கு நல்ல பிரதிபலன்கள் கிடைக்காத சந்தர்ப்பங்கள் காணப்படல்.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநொய் நிலைமையின் காரணமாக நிலையப் பரீட்சிப்பானது மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையானவைகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு ஏற்பட்டமை.

(இ) 2022 ஆம் ஆண்டின் போது நாட்டில் காணப்பட்ட எரிபொருள் சிக்கலின் காரணமாக பௌதீக பரீட்சிப்பு நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டி ஏற்பட்டமை

(ஈ) நாளதுவரையாக்கிய தரவுகளில் காணப்பட்ட தட்டுப்பாடுகள் (நிகழ்காலத்தில் உள்ளபடியாகக் காணப்பட்ட ஹெக்டயர் அளவு சம்பந்தமான நிலஅளவைகளை உள்ளடக்கிய ஏனைய தரவுகள்)

## 2.6 கணக்காய்வு நடைமுறைகள்

பின்வரும் நடைமுறைகளினூடாக சான்றுரீதியான விடயங்கள் சேகரிக்கப்பட்டன.

(i) ஆவணப்படுத்தப்பட்ட தரவுகள்

(ii) மீளாய்வுத் தரவுகள்

(iii) பகுப்பாய்வுத் தரவுகள்

(iv) பௌதீக ரீதியாக பரீட்சித்து பெற்றுக்கொள்ளப்பட்ட தவல்கள்

(v) நேர்முகப் பரீட்சைகள்

(vi) வினாக்கொத்துக்களை வழங்குதல்

(vii) நிபுணத்துவ அறிவை பரிமாறுதல்

(viii) சர்வதேச கணக்காய்வு அறிக்கைகளைப் பரீட்சித்தல்

### 2.6.1 சான்றுகளின் மூலம்

பின்வரும் சான்று மூலங்களின் கீழ் சான்றுகள் சேகரிக்கப்பட்டன.

(i) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் அது சம்பந்தமாக எழுத்து மூல தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

(ii) வன பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் மற்றும் எழுத்துமூல தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்

(iii) வர்த்தமானி அறிவித்தல்கள்

(iv) ஊடகங்களின் மூலம் (தொலைக்காட்சி, சஞ்சிகைகள், புத்தகங்கள், மற்றும் இணையதளங்கள்) தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

### 2.7 கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 2.7.1 சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்

(i) 1964 இன் 44 ஆம் இலக்க மற்றும் 1970 இன் 01 ஆம் இலக்க மற்றும் 1993 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களால் திருத்தப்பட்ட வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (469 ஆம் அத்தியாயம்)

(ii) 2009 இன் 22 ஆம் இலக்க வன சீவராசிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டம்

(iii) 1966 இன் 13 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட (451 ஆம் அத்தியாயம்) வன கட்டளைச்சட்டம்

(iv) 2009 இன் 65 ஆம் இலக்க காடுகள் (திருத்திய) அதிகாரச் சட்டம்

(v) 1951 இன் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு தொடர்பான கட்டளைச் சட்டம்

(vi) இலங்கையில் வெளிநாட்டு உயிரின வகைகள் தொடர்பான தேசிய கொள்கை, தந்திரோபாயம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் - 2016 யூன்

(vii) இலங்கையின் ஆக்கிரமிக்கின்ற வெளிநாட்டு உயிரின வகைகளை இனங்காணும் உருவப்படம் ரீதியான வழிகாட்டிகள்

#### 2.7.2 ஆராய்ச்சி அறிக்கைகள்

ii. The National Red List of Sri Lanka; Conservation status of the fauna and flora. (Ministry of Environment and the National Botanic Gardens)

#### 2.7.3 நானாவித கட்டளைச் சட்டங்களின் கீழான வரையறைகள்

அட்டவணை இலக்கம் - 05 நானாவித கட்டளைச் சட்டங்களின் கீழான வரையறைகள்

| **அதிகாரச் சட்டத்தின் பெயரும் பிரிவுகளும்** | **விபரம்** |
|---|---|
| வன உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டம் (469 ஆம் அத்தியாயம்) | 6 ஆம் பிரிவு - தேசிய பூங்காக்களுள் தடைசெய்தல் செயற்பாடு |
| 6(உ) பிரிவு | பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், சுரங்கம் தோண்டுதல், அல்லது ஏனைய ஏதாவது செயற்பாடுகளுக்காக ஏதாவதொரு காணியை துப்பரவு செய்தல் அல்லது தோண்டுதல் |

| | |
|---|---|
| 6(ஊ) பிரிவு | தீ மூட்டுதல் அல்லது கொண்டு வருதல் |
| 6(ஏ) பிரிவு | ஒரு காட்டினை புதிதாக வெளியாக்குதல் |
| 6(ஐ) பிரிவு | ஏதாவது நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக அல்லது அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் குடியிருப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழானவற்றினைத் தவிர்த்து அவ்வாறு ஒரு கட்டிடத்தினை நிர்மாணித்தல் அல்லது அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் குடியிருத்தல். |
| **2009 இன் - 22 ஆம் இலக்க வன உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டம்** | |
| 4.2.(அ) (1) ஆம் பிரிவு | நிர்ணயிக்கப்படுகின்ற ஏதாவது வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு ஏதாவது தேசிய சரணாலயத்திற்கு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுகின்ற திட்டமிடல் குழுவினால் ஒரு முகாமைத்துவ திட்டத்தினை தயாரிக்கலாம். |
| (9)(5) ஆம் பிரிவு- பிரதான நியதிச் சட்டத்தின் 6 (3) ஆம் பிரிவின் திருத்தம் | ஏதாவது ஒரு நபரினால் வீட்டு மிருகத்தினை தேசிய சரணாலயம் வரை கொண்டு செல்லல் அல்லது அவ்வாறான ஒரு மிருகத்திற்கு அவ்வாறான நிலத்தில் சுற்றித்திரிவதற்கு இடமளிக்காதிருத்தல் வேண்டும். |
| **(ஆ) 1966 இன் 13 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட (451 ஆம் அத்தியாயம்) வன கட்டளைச் சட்டம்** | |
| 9 ஆம் பிரிவு மற்றும் iii ஆம் அத்தியாயம் - கிராமிய வனம்- (ஆ)(2) பிரிவு | பசுக்கள் புல் மேய்தல் முதலியவற்றிற்கான உரிமைகளை சில சந்தர்ப்பங்களில் இடைநிறுத்துவதற்கு அமைச்சருக்கு உள்ள உரிமை |
| 14 ஆம் பிரிவு (ஆ) (2) | உப பிரிவின் கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட சில பணிப்புரைகளை மீறி பசுக்கள் புல் மேயாதிருத்தல் வேண்டும். |
| iv ஆம் அத்தியாயம் வனம் மற்றும் வனப் பொருட்களைப் பாதுகாத்தல் 20 (1) | பாதுகாக்கப்பட்ட வனத்திற்கு அல்லது கிராமிய வனத்திற்கு உள்ளடக்கப்படாத ஒரு வனத்தில் புல் பயிர்களை இல்லாதுவிடின் வனப் பொருட்களை |

| | |
|---|---|
| | பயன்பாட்டிற்கு எடுத்தல் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு இணங்கிய வகையில் அன்றி எந்த ஒரு நபரும் செய்யாதிருத்தல் வேண்டும். |
| 20(1)(3)(உ) | புற்களை வெட்டுதல் மற்றும் மாடுகள் புல் மேய்தலினை முறைமைப்படுத்துதல் அல்லது தடைசெய்தல் மற்றும் புல் மேயும் போதும் அந்த மாடுகள் புல் மேயும் போதும் செலுத்த வேண்டிய கட்டணத்தை (இருக்குமாயின்) முறைமைப்படுத்துதல் |
| 78 ஆம் பிரிவு | ''வன பொருட்கள்'' (ஆ) புல், பிரம்பு, கோரைப்புல், பாசி என்பவைகளை உள்ளடக்கிய மரம் அல்லாத தாவரங்களின் சிறிய பகுதிகள் அல்லது அவற்றிலிருந்து உருவாகின்றவைகள் |
| **(இ) 2009 இன் 65 ஆம் இலக்க காடுகள் (திருத்திய) அதிகாரச் சட்டம் - பாதுகாக்கப்பட்ட வனத்தை தடைசெய்தல் செயற்பாடு** | |
| 9 (6)(2) (இ) பிரிவு | ஒரு பாதுகாப்பு வனத்தில் மாடுகளை முறையற்ற வகையில் உட்செலுத்துவதற்கு இடமளித்தல் அல்லது புற்கள் அல்லது வேறு ஏதாவது தாவரத்தினை வெட்டுகின்ற இல்லையாயின் அப்புற்களை அல்லது தாவரங்களை மாடுகளுக்கு உணவுக்காக வழங்குகின்ற எவராவது நபர் குற்றவாளியாகுவார். |
| 10(7)(1)(ஆ) பிரிவு | பாதுகாக்கப்பட்ட வனத்தில் மாடுகளை உட்செல்லுவதற்கு இடமளித்த அல்லது புற்கள் அல்லது வேறு ஏதாவது தாவரத்தினை வெட்டுகின்ற இல்லாது விடின் புற்களை அல்லது தாவரங்களை மாடுகளுக்கு உணவாக வழங்குகின்ற நபர் ஒரு குற்றவாளியாவார். |
| 20(1)(உ) பிரிவு | சரணாலயம், பாதுகாக்கப்பட்ட வனம் அல்லது கிராமிய வனம் தவிர்ந்த ஏனைய வனத்தில் மாடுகளுக்கு புற்களை உணவாக வழங்குகின்ற, வேட்டையாடுகின்ற வெடிவைக்கின்ற, மீன்பிடிக்கின்ற, இல்லாதுவிடின் பொறி, கூரான ஆயுதம் அல்லது துவக்குகளால் பொறிவைக்கின்ற நபர் குற்றவாளியாவார். |

| (ஈ) 1951 இன் 25 ஆம் இலக்க மண் பாதுகாப்பு தொடர்பான கட்டளைச் சட்டம் | |
|---|---|
| (4)(உ) பிரிவு | மண் நீரினால் அடித்துச் செல்வதனை நிறுத்துதல் அல்லது மட்டுப்படுத்துதல் அல்லது கால்வாய்கள் நீரோடைகள் உருவாகும் பிரதேசங்கள் மற்றும் கரைகளை பாதுகாக்கும் செயற்பாட்டிற்காக அவ்வாறு செய்தல் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் அல்லது புற்களை வளர்க்கும் நடவடிக்கைகளுக்காக காணிகளை ஈடுபடுத்துவதனை மட்டுப்படுத்துதல். |
| 4(ஊ) பிரிவு | மண்ணை பாதுகாத்தல் மற்றும் தீயினால் ஏற்படும் ஆபத்துக்கள் அல்லது அதனால் ஏற்படும் சேதங்களை குறைப்பதற்காக காடுகள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் நில பிரதேசங்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் பயன்பாட்டிற்கு எடுத்து கொள்வதனை தடைசெய்தல் அல்லது மட்டுப்படுத்துதல் |
| 6(உ) பிரிவு | ஒரு காணியை புல் மேய்வதனால் அப்காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு தடை ஏற்படுமாயின் இல்லாது விடின் அவ்வாறு மேய்வதனால் மண்ணின் செழிப்புதன்மை குறைவடையும் அளவிற்கு அல்லது இல்லாவிடின் அவற்றிலிருந்து மண் அடித்துச் செல்வதனால் வன இழப்பிற்கு ஆதரவு கிடைக்குமாயின் அந்த அளவிற்கு மேற்கூறிய காணியில் மிருகங்கள் புல்மேய்தல். |
| (6)(எ) பிரிவு | மேய்ச்சல் நிலத்திற்கு தீவைத்தல் மற்றும் சேனைகளுக்குத் தீவைக்கும் போது தீ பரவிச் செல்வதனைத் தடைசெய்தல் இல்லாது விடின் மட்டுப்படுத்துதல். |

## 3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 நிறுவன ரீதியான பின்னணி

#### 3.1.1 தேசிய கொள்கையின் தேவைப்பாடு

இலங்கையிலுள்ள தேசிய பூங்காக்களில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமான முகாமைத்துவ திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை மாத்திரம் காணப்படுவதுடன் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வது சம்பந்தமான தேசிய கொள்கை மற்றும் அதன் அடிப்படையில் தந்திரோபாயத் திட்டத்தை அமுல்ப்படுத்துதல் அவதானிக்கப்படவில்லை. நிறுவன ரீதியான கடமைகள், குறிக்கோள்கள், நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக்கள், செயற்பாடுகள் முதலியவற்றினை உறுதியாக இனங்காணக்கூடியதாக இருந்த போதிலும் ஒரு தேசிய கொள்கை இல்லாததனால் அச்செயற்பாடுகள் எதிர்பாரத்தவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

#### 3.1.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள்

இலங்கையிலுள்ள தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வது சம்பந்தமாக முறைப்படியான காலத்திற்குப் பொருத்தமான மற்றும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் வகையிலான சட்ட முறைமையின் தேவைப்பாடு கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது சம்பந்தமாக இன்றுவரை முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.3 தேசிய பூங்காக்களிலுள்ள மேய்ச்சல் நிலங்களின் முகாமைத்துவ திட்டம்

(அ) இலங்கையிலுள்ள தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 2009 இன் 22 ஆம் இலக்க கால்நடை மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டம் தொடர்புபடுவதுடன் அதிகாரச் சட்டத்தின் 4.2 (அ)(1) ஆம் பிரிவின் மூலம் தேசிய காப்பகத்திற்கான மற்றும் சரணாலயங்களுக்கான முகாமைத்துவ திட்டத்தினை தயாரிப்பது தொடர்பான ஏற்பாடுகள் காட்டப்பட்டிருந்தும் கணக்காய்விற்காக உட்படுத்தப்பட்ட தேசிய பூங்காக்களுக்கு மத்தியில் ஹோட்டன் சமவெளி, கவுடுல்ல, மின்னேரியா, லுனுகம்வெஹர ஆகிய தேசிய பூங்காக்களின் முகாமைத்துவ திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த முகாமைத்துவ திட்டங்களின் மூலம் உரிய தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வது சம்பந்தமாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலினைக் கட்டுப்படுத்துவதற்காக சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டம் மற்றும் அதற்கிணங்க தயாரிக்கப்படுவதான ஒரு செயல்நடவடிக்கைத் திட்டம் தேவைப்படுவதுடன் போதியளவு நிதி ஏற்பாட்டினை உரிய காலத்தில் வழங்குதல் அத்தியவசியமானதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(இ) தேசிய இனவிருத்தி தந்திரோபாய செயல்நடவடிக்கைத் திட்டம் 2016- 2022 இன் 2 ஆம் இலக்கின் கீழ் ஆக்கிரமிப்பு வெளிநாட்டு உயிரின வகைகளின் மூலம் உருவாகின்ற தாக்கங்களைக் குறைத்தல் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 11 ஆம் நடவடிக்கையாக இனங்காணப்பட்ட ஆக்கிரமிப்பு வெளிநாட்டு உயிரின வகைகளுக்காக அந்த ஒவ்வொரு உயிரின வகைக்குமான சிறப்பான முகாமைத்துவ திட்டத்தினை தயாரித்தல் இன்றுவரை போதியளவில் இடம்பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.2 மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல்

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளாக மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாக்கும் நடைமுறை சம்பந்தமான அவதானிப்புக்கள் பின்வருமாறாகும்.

#### 3.2.1 பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மேய்ச்சல் நிலங்கள்

வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் விசேட கவனம் செலுத்தி பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மேய்ச்சல் நிலங்களாக பின்வரும் தேசிய பூங்காக்களுக்குரிய மேய்ச்சல் நிலங்கள் இனங்காணப்பட்டிருந்தன.

அட்டவணை இலக்கம் -06 விசேட கவனம் செலுத்தி பேணிப்பாதுகாக்க வேண்டிய மேய்ச்சல் நிலங்கள்

| **தொடர் இலக்கம** | **மேய்ச்சல் நிலங்களிலுள்ள தேசிய பூங்காவின் பெயர்** | **தேசிய பூங்காவாக வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட திகதி** |
|---|---|---|
| 01 | யால | 1938 பெப்ரவரி 25 |
| 02 | லுனுகம்வெஹெர | 1995 திசெம்பர் 08 |
| 03 | புன்தல | 1993 சனவரி 04 |
| 04 | உடவளவ | 1972 யூன் 30 |
| 05 | குமன | 2006 யூலை 05 |
| 06 | மாதுரு ஓயா | 1983 யூன் 09 |
| 07 | லாகுகல | 2006 யூலை 20 |
| 08 | வில்பத்து | 1938 பெப்ரவரி 25 |
| 09 | ஹொரவ்பதான | 2011 திசெம்பர 06 |
| 10 | வஸ்கமுவ | 1984 ஆகஸ்ட் 07 |
| 11 | கவுடுல்ல | 2002 ஏப்ரல் 01 |
| 12 | ஹோட்டன் சமவெளி | 1988 மார்ச் 16 |

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் விசேட கவனம் செலுத்தி பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய மேய்ச்சல் நிலமாக இனங்காணப்பட்ட இந்த தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக விக்டோரியா, ரன்தெனிகல, ரன்டெம்பே சரணாலயங்கள் மற்றும் ராவன எல்ல ஆகிய சரணாலயங்கள் அமைந்துள்ள மேய்ச்சல் நிலங்கள் சம்பந்தமாக விசேட கவனம்

செலுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டிய மேய்ச்சல் நிலமாக இனங்காணப்பட்டிருந்தும் இவற்றினை பேணிப்பாதுகாப்பது சம்பந்தமாக கணக்காய்வுத் திகதியான 2022 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அதானிக்கப்பட்டது.

### 3.2.2 மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றமை சம்பந்தமாக காணப்படுகின்ற அச்சுறுத்தல்கள்

நிகழ்காலத்தில் மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றமை சம்பந்தமாக காணப்படுகின்ற அச்சுறுத்தலாக ஆக்கிரமிப்பு பயிர்களின் தீவிர பரவல், வீட்டு மாடுகள் என்பன அனுமதியின்றி சரணாலயத்திற்குள் உட்செல்லுதல், அடிக்கடி ஏற்படுகின்ற அதிக மழை வீழ்ச்சி மற்றும் வற்ட்சிக் காலத்தின் போது ஏற்படுகின்ற தீப்பிடித்தல் போன்ற பல்வேறு காலநிலை மாற்றங்களினால் மேய்ச்சல் நிலங்களைப் பராமரித்தலினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு தடை ஏற்படுதல் முதலியன இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆக்கிரமிப்பு பயிர்களின் திவிர பரவல் மனைசார்ந்த மாடுகள் அனுமதியின்றி சாரணாலயங்களுக்குள் உட்செல்லுதல் போன்ற தடைகளைக் குறைப்பதற்காக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2.3 மேய்ச்சல் நிலங்களை பேணிப் பாதுகாப்பது சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

2015 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது மேய்ச்சல் நிலங்கள் மற்றும் சரணாலயங்களில் காணப்பட்ட ஆக்கிரமிப்பு பயிர்களை நீக்குவது சம்பந்தமாக பின்வரும் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டன.

**அட்டவணை இலக்கம் 07- மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாத்தல் தொடர்பாக அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

| ஆண்டு | செயற்திட்டத்தின் பெயர் | செயற்திட்ட காலம் |
|---|---|---|
| 2018 | உடவளவ தேசயி பூங்காவின் ஆக்கிரமிக்கின்ற லன்டானா பயிர்களை அப்புறப்படுத்தும் செயற்திட்டம் | 6 மாதங்கள் |
| 2018 | தப்போவ சரணாலயத்தின் களப்பு அந்தரவினை | 01 ஆண்டு |

| | | |
|---|---|---|
| | அப்புறப்படுத்தும் செயற்திட்டம் | |
| 2018 | புத்தல தேசிய பூங்காவின் களப்பு அந்தர மற்றும் கடுபதொக இனை அப்புறப்படுத்தும் செயற்திட்டம் | 01 ஆண்டு |
| 2019 | புந்தல தேசிய பூங்காவில் ஆக்கிரமிக்கும் பயிர்களை அப்புறப்படுத்துதல் செயற்திட்டம் | 03 மாதங்கள் |
| 2019 | உடவளவ தேசிய பூங்காவில் ஆக்கிரமிக்கும் லண்டானா பயிர்களை அப்புறப்படுத்துதல் செயற்திட்டம் | 01 ஆண்டு |
| 2020 | புந்தல தேசிய பூங்காவில் களப்பு அந்தராக்களை அப்புறப்படுத்தும் செயற்திட்டம் | 01 ஆண்டு |
| 2020 | தப்போவ சரணாலயத்தில் களப்பு அந்தரக்களை அப்புறப்படுத்தம் செயற்திட்டம் | 01 ஆண்டு |


(அ) ஆகிகிரமிப்பு பயிர்களை அப்புறப்படுத்தும் செயற்திட்டத்தினை தொடர்ச்சியாக அமுல்ப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய செயற்திட்டங்களை குறுகிய செயற்திட்ட காலத்திற்கு மட்டுப்படுத்துவதனால் அச்செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த ஆக்கிரமிக்கும் பயிர்களை அப்புறப்படுத்தும் செயற்திட்டத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது என பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2.4 வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் மேய்ச்சல் நிலங்கள் சம்பந்தமாக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்


2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் மேய்ச்சல் நிலம் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவுகள் பின்வருமாறாகும்.

**அட்டவணை இலக்கம் -08 - மேய்ச்சல் நிலம் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|---|---|
| பரப்பளவு- ஹெக்டயர் | 987.5 | 415 | 187 | 272 | 662.39 |
| நிகழ்ச்சித்திட்டங்களின் கிரயம் (ரூபா) | 4,145,342 | 2,050,580 | 1,940,044 | 8,123,617 | 26,988,288 |




**உருவப்படம் - 01 மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாத்தல் மேற்கொண்ட மொத்த நிலத்தின் அளவு**




**உருவப்படம் 02- மேய்ச்சல் நிலங்கள் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் கிரயம்**

(அ) கடந்த 05 ஆண்டுகளில் மேய்ச்சல் நிலங்களை பேணிப் பாதுகாத்தல் மேற்கொள்ள்ப்பட்ட பரப்பளவு மற்றும் அதற்காக இடம்பெற்ற செலவுகளைப் பரீட்சித்த போது அச்செலவுகள் படிப்படியாக அதிகரித்திருந்தது. உரிய செயற்பாடுகள் விஞ்ஞான ரீதியான அடிப்படையின் பிரகாரம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட தேசிய பூங்காக்களினுள் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3 ஆக்கிரமிப்பு பயிர்களின் தாக்கம்

ஆக்கிரமிப்பு வெளிநாட்டு பயிர் வகை என்ற தீவிரமாக அதிகரித்துச் செல்லும் மற்றும் இனவிருத்தி இயலுமைக்கு இணங்க மற்றும் புதிய சுற்றாடல் முறைமைக்கு துரிதமாக ஒத்துப்போவதற்கான இயலுமை மற்றும் போதியளவில் பிரதேசத்தில் பரவும் இயலுமையின் அடிப்படையில் வதிவிடம் ஒன்று அல்லது பலவற்றில் பரவியுள்ள உள்நாட்டிற்குரியதல்லாத பயிராகும். இவ்வாறான ஆக்கிரமிப்பு பயிர் வகைகள் மேய்ச்சல் நிலங்களின் இனவிருத்திக்கு புற்கள் மேயும் கால் நடைகளின் உணவுகளுக்கு மேய்ச்சல் நிலங்களின் அழகிற்கு மற்றும் சுற்றுலா கவர்ச்சிக்கு அச்சுறுத்தலாக காணப்படும் ஒரு காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.


#### 3.3.1 ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா

அண்ணளவாக 500 ஹெக்டயர்களுக்கு மேற்பட்ட பரப்பளவில் பரவிக் காணப்படும் ஹோட்டன் சமவெளி மேய்ச்சல் நிலத்தில் காணப்படும் ஆக்கிரமிப்பு பயிர் வகையாக யுலெக்ஸ் பயிர் (*Ulex Ecuropeus*) கணக்காய்வுத் திகதி வரை இனங்காணப்பட்டிருந்தது. யுலெக்ஸ் பயிர் முட்களுடனான மஞ்சள் நிற சிறிய பூக்கள் உள்ள பயிராக இருப்பதுடன் தேனீக்களின் மூலம் மகரந்த சேர்க்கை இடம்பெறும்.

இதற்கு மேலதிகமாக ஆக்கிரமிப்பு பயிராக வகைப்படுத்தப்படாத பூவரசு பயிரும் ஹோட்டன் சமவெளி இனவிருத்தியினுள் குறிப்பிடக்கூடிய பயிர் வகையாகும்.

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோட்டன் சமவெளியின் மேய்ச்சல் நிலத்தினை ஆக்கிரமித்து யுலெக்ஸ் பயிர் (*Ulex Ecuropeus*) மேய்ச்சல் நிலம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றது என பௌதீக பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக உலக மரபுரிமையாக கருதப்படுகின்ற ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களுக்கு சுற்றாடல் ரீதியாக பாரிய பாதிப்புக்கள் ஏற்படலாம் என அவதானிக்கப்பட்டது. மேலும் 2009 ஆம் ஆண்டிலிருந்து யுலெக்ஸ் ஆக்கிரமிப்பு பயிர் பரவுவதனை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு அமைப்புக்கள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலையீட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அதனை முறைப்படியாக கட்டுப்படுத்துவதற்கு முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.




**உருவப்படம் - 03- ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதல்**

(ஆ) ஹோட்டன் சமவெளியில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க பயிர் வகையாக பூவரசு (*Rhododendron arboretum)* இனங்காணப்படுகின்றது. ஏப்ரல் மாதத்திலிருந்து யூலை மாதம் வரையான கபாலத்தின் போது இவைகள் கடும் சிகப்பு நிறத்தில் பூக்கும் பறவைகள் மூலம் மகரந்த சேர்க்கை இடம்பெறுகின்ற பூவரசு பயிர் சார்ந்ததாக இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து வருகைதந்த பறவையான இலங்கை சிதெசியா (*Zosterops Ceylonensis*) காணப்படுகின்றது. தற்பொழுது இப்பயிர் ஹோட்டன் சமவெளியின் மேய்ச்சல் நிலம் முழுவதும் சிறிய அளவிலும் பாரிய மரங்களாக அதிக அளவிலும் காணப்படுவதுடன் தீவிரமாக பரவுவதனை காணக்கூடியதாக உள்ளது. இந்த வகையில் தீவிர அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் மேய்ச்சல் நிலங்கள் காணப்படுவதற்கு ஆபத்துக்கள் ஏற்படலாம் என்பதுடன் விஞ்ஞானரீதியான அறிவினைப் பயன்படுத்தி சுற்றாடலுக்குச் சாதகமாக முகாமைத்துவம் செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டுமென வெளிக்கள பரீட்சிப்பின் போது நடைபெற்ற கலந்துரையாடலுக்கு இனங்க அவதானிக்கப்பட்டது. பூவரசுப் பயிர் பரவுதல் அதிகரித்து மரங்கள் பெரிய அளவில் வளந்ததன் பின்னர் பரவுவதனைக் கட்டுப்படுத்த செல்கையில் மேய்ச்சல் நிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பு அதிகரித்தல், செலவு அதிகரித்தல், மற்றும் கடம்பன் மான்களின் உணவுக்கு பற்றாக்குறை ஏற்படுவதனால் அவற்றின் குடித்தொகை குறைவடைவதன் மூலம் ஹோட்டன் சமவெளிக்கு உள்ள சுற்றுலா கவர்ச்சி குறைவடைதல் ஆகிய பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க ஏற்பட்டுள்ளது.




**உருவப்படம் - 04- பூவசுப் பயிர் பரவுதல்**

### 3.3.2 மின்னேரியா தேசிய பூங்கா

மின்னேரியா தேசிய பூங்காவில் 1,160 ஹெக்டயர் அளவான மேய்ச்சல் நிலத்தில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதல் தொடர்பாக பின்வருமாறு விபரிக்கலாம். பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.


**அட்டவணை இலக்கம் -09 மின்னேரியா தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதல்**

| மேய்ச்சல் நிலத்தின் அளவு | ஆக்கிரமிப்பு பயிர்பரவுதல் | ஆக்கிரமிப்பு பயிரின் வகை |
|---|---|---|
| குளத்து மைதானம் 1000 ஹெக்டயர் | நிலத்தில் 30% | அகட, கயில |
| பெரிய மைதானம் 20 ஹெக்டயர் | நிலத்தில் 75% | பொடிசிங்யோ மான் |
| வேரபிடிய 10 ஹெக்டயர் | நிலத்தில் 75% | பொடிசிங்யோ மான், லன்டானா |
| பூங்கா வீதி முறைமை 100 ஹெக்டயர் | நிலத்தில் 60% | பொடிசிங்யோ மான், லன்டானா |
| உளபிடிய 20 ஹெக்டயர் | நிலத்தில் 75% | கடுஉன, லன்டானா பொடிசிங்யோ மான் |
| மின்சார வயர் வீதி 10 ஹெக்டயர் | நிலத்தில் 75% | பொடிசிங்யோ மான் |

**(பூங்கா பொறுப்பாளரின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள்)**

(அ) மேற்கூறிய குறிப்புக்களின் பிரகாரம் மின்னேரியா தேசிய பூங்காவில் உள்ள வரையறுத்த மேய்ச்சல் நில அளவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலானது புற்களை உணவாகக் கொள்ளும் கால்நடைகளின் வாழ்விற்கு அதிக பாதிப்பு ஏற்படுவதுடன் பூங்காவின் இருப்பிற்கும் தடையாக இருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. மேய்ச்சல் நிலம் முழுவதும் ஆக்கிரமிப்பு பயிர் பரவியுள்ள முறைமையானது பௌதீக பரீட்சிப்பின் போதும் உறுதிப்படுத்தப்பட்டதுடன் பூங்காவின் மேய்ச்சல் நிலம் முழுவதும் பரவியுள்ள ஒரு ஆண்டு மற்றும் பல் ஆண்டு ஆக்கிரமிப்பு பயிர்களை இனங்கண்டு பரவுதலினை கட்டுப்படுத்தும் விஞ்ஞான ரீதியான நடைமுறைக்கு இணங்க தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) யானைகள் மற்றும் கொம்பன் யானைகள் அதிக அளவானவைகளை ஒரு இடத்திலிருந்து பார்க்ககூடிய உலகத்திலுள்ள விசேடமான இடமான மின்னேரிய தேசிய பூங்காவிற்கு தற்பொழுது யானைகளின் வருகை அதிக அளவில் குறைவடைந்திருந்ததுடன் பூங்காவிலுள்ள மேய்ச்சல் நிலம் பரவிக் காணப்படும் பரப்பளவு குறைவடைதல் அதற்கு பிரதான காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.





**(உருவப்படம் 05- மின்னேரியா தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர் பரவுதல்)**

### 3.3.3 கவுடுல்ல தேசிய பூங்கா

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கவுடுல்ல தேசிய பூங்காவில் 1,080 ஹெக்டயர் அளவான மேய்ச்சல் நிலத்தில் கவுடுல்ல குளத்து மைதானம், ஒன்பது கதவுகள் பிரதேசம், இரண்டு கதவுகள் பிரதேசம், நான்கு கதவுகள் பிரதேசம், மயில மைதான பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் அங்கட, பொடிசிஸ்யோமான், கயில போன்ற ஆக்கிரமிப்பு பயிர்கள் அதிக அளவில் பரவியுள்ளது என 2022 சனவரி 21 ஆந் திகதி மேற்கொண்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதானமாக புல்லை உணவாகக் கொள்ளும் கால்நடைகள் அதிக எண்ணிக்கையானவை இருக்கின்ற இந்த தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர் பரவுவதனை கட்டுப்படுத்துவதற்கு தீவிர கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த நடவடிக்கை மிகவும் துரிதமாக தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டும் என அவதானிக்கப்பட்டது.




**உருவப்படம் -06 - கவுடுல்ல தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர் பரவுதல்**

### 3.3.4 கலாவெவ தேசிய பூங்கா

கலாவெவ தேசிய பூங்காவில் அமைந்துள்ள கலாவெவ நீர்த் தேக்கத்தின் பல்வேறு இடங்களில் அகட, ஜபன் ஜபர, செல்வீனியா போன்ற ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியிருந்ததனைக் காணக்கூடியதாக உள்ளதுடன் அவற்றினை கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.




**உருவப்படம் -07 - கலாவெவ தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதல்**

### 3.3.5 லுனுகம்வெஹர தேசிய பூங்கா

லுனுகம் வெஹர தேசிய பூங்காவில் உள்ள மொத்த புல் நிலத்தின் அளவு அண்ணளவாக 3,000 ஹெக்டயர்களாக இருந்ததுடன் அவற்றில் 2,000 ஹெக்டயர் அளவான நிலத்தில் லென்டானா, பொடிசிங்யோமரன், கெப்பெடியா போன்ற ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியிருந்த போதிலும் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலினை கட்டப்படுத்துதலானது தற்பொழுது 1000 ஹெக்டயர் அளவில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. யானைகள் மற்றும் ஏனைய பயிர் உண்ணும் கால் நடைகளின் உணவு மற்றும் வசிப்பிடங்களுக்காக காணப்படுகின்ற இந்த மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பகுதியும் இழக்கப்படுதல் மிகவும் பிரச்சினையாக உள்ளதுடன் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலினை தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது என அவதானிக்கப்பட்டது.



**உருவப்படம் -08 - லுனுகம் வெஹர தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதல்**

### 3.3.6 குமன தேசிய பூங்கா

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குமன தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களின் அளவு அண்ணளவாக 8,000 ஹெக்டயர் அளவில் இருந்ததுடன் அவற்றில் 1,025 ஹெக்டயர் அளவில் (12.81 சதவீதம்) கந்தபான, கடுபதொக், பொடிசிஸ்யோமான் போன்ற ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியுள்ளது எனவும் 2021 ஆம் ஆண்டளவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுவதனைக் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததானது 55 ஹெக்டயர் அதாவது 5.36 சதவீதம் அளவான மிகவும் சிறிய நிலப் பகுதியில் எனவும் வெளிப்படுத்தப்பட்டது. புல் மேயும் கால்நடைகள் மிகவும் அதிக அளவில் வசிக்கின்ற இந்த தேசிய பூங்காவில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்தல் மிகவும் அத்தியவசியமான விடயம் என அவதானிக்கப்பட்டதடன் அதன் மூலம் அந்த கால்நடைகளுக்கு போதியளவு உணவு, நீர், வதிவிடம் சுலபமாக கிடைத்தல் இடம்பெறுகின்றது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) யானைகள் நடமாடும் எல்லையானது அதிக பரப்பளவு முழுவதும் பரவியுள்ளதனால் பாதுகாக்கப்பட்ட பூங்காக்களில் உயிரியல் முறைமைகள் நிலைத்திருப்பதானது சிறந்த முகாமைத்துவத்தின் மூலம் (உணவுகளின் போதியளவான தன்மையும் தரமானவையும்) ஏற்படக்கூடிய யானை மனித மோதல் போன்ற சமூக பிரச்சினையை கட்டுப்படுத்த முடியும் என அவதானிக்கப்பட்டது.

### 3.3.7 வாகுகல தேசிய பூங்கா

லாகுகல தேசிய பூங்காவின் மொத்த மேய்ச்சல் நில அளவு அண்ணளவாக 1,408 ஹெக்டயர்களாக இருந்ததுடன் அவற்றில் 543.48 ஹெக்டயர் முழுவதும் ஆக்கிரமிப்பு பயிர்களான ஜபன் ஜபர, படஸ், பொடிசிங்யோமரன் ஆகிய பயிர்கள் பரவியிருந்தது. இந்த ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுவதனை கட்டுப்படுத்துதலானது 10 ஹெக்டயர் அளவான அதாவது 1.54 சதவீதமான மிகவும் சிறிய பிரதேசமாக இருந்ததுடன் இந்த தேசிய பூங்காவினுள் இருக்கின்ற பாரிய குளமான மஹாவெவவில் (லாகுகல குளம்) ஜபன் ஜபர பரவியிருந்தது.




**உருவப்படம் -09 - லாகுகல தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர் பரவுதல்**

### 3.3.8 ஹொரவ்பதான தேசிய பூங்கா

ஹொரவ்பதான தேசிய பூங்காவில் 2021 ஆம் ஆண்டளவில் மேய்ச்சல் நிலங்களின் அளவு அண்ணளவாக 120 ஹெக்டயர்கள் எனவும் அவற்றில் 35 ஹெக்டயர் முழுவதும் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டு வரை அவற்றில் 29 ஹெக்டயர் அளவானவற்றில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த தேசிய பூங்காவில் அண்ணளவாக 100 இற்கு மேற்பட்ட மான்களும் கடவை மான்களும் 50-75 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான யானைகளும் வசிக்கின்ற நிலமாக மாறியுள்ளது என வெளிப்படுத்தப்பட்டதுடன் சிறிய நிலப்பகுதியினைக் கொண்ட இந்த பூங்காவிலும்

ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலினை தொடர்ச்சியாக கட்டுப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. இது அதில் உயிர்வாழ்கின்ற பயிரை உணவாகக் கொள்ளும் கால்நடைகள் வசிப்பதனைப் போல மேய்ச்சல் நிலங்களை பாதுகாக்கும் பயிர் முறைமையின் உள்ளமைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தலாம்.

**3.3.9** கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட தேசிய பூங்காக்கலிலுள்ள அனைத்து மேய்ச்சல் நிலங்களிலும் ஆக்கிரமிக்கும் பயிர்கள் பரவியிருந்ததுடன் அவை மேய்ச்சல் நிலங்கள் நிலைத்திருப்பதற்கு சவாலாக உள்ளது என அவதானிக்கப்பட்டது.

## 3.4 அனுமதியின்றி குடியிருத்தல் மற்றும் அனுமதியின்றி பயிர்ச் செய்கை மேற்கொள்ளல்

ஒவ்வொரு தேசிய பூங்காவிலும் அனுமதியற்றதாக மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளானது அதில் உயிரின முறைமைகள் நிலைத்திருப்பதற்கு பாதகமான தாக்கம் ஏற்படுத்தியுள்ளதுடன் சட்டரீதியாக இனங்காணப்பட்டுள்ள நில அளவுகளின் பரப்பளவு படிப்படியாக சுருங்கிவருவதன் மூலம் தீவிரமான பல சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகள் உருவாகுவதற்கு வாய்ப்பு உள்ளது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் மேற்கூறியவாறு தேசிய பூங்காக்களின் நில அளவுகளில் பூங்காக்களில் வாழும் கால்நடைகளுக்கு இழக்கப்படுதலானது அக்கால்நடைகள் நிலைத்திருப்பதற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் என்பதுடன் கால்நடைகளின் உணவு மற்றும் வதிவிடம் குறைவடைவதற்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம் என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இதற்காக தொடர்புபட்ட சட்டங்கள், விதிகள் காணப்பட்டிருந்தும் அச்சட்டங்கள், விதிகளை அமுல்ப்படுத்தும் போது சில வற்புறுத்தல்களின் அடிப்படையில் அந்த சட்டங்கள், விதிகள் முறைப்படியாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. உரிய உத்தியோகத்தர்களுக்கு அதிகாரத்தை அமுல்ப்படுத்துவதற்கு காணப்படுகின்ற இடையூறுகளும் இதற்கு காரணமாக இருந்தது.

### 3.4.1 தேசிய பூங்காக்கள் மட்டத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள்

#### 3.4.1.1 மின்னேரியா தேசிய பூங்கா

மின்னேரியா தேசிய பூங்காவில் ஹிங்குரக்கொட மகசென் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கல்லிந்த பெரிய குளத்தின் கீழ் 110 ஏக்கர் வயல் காணியில் அனுமதிப்பத்திரத்துடன் மற்றும் அனுமதியுற்ற பாரம்பரிய வயல் காணியிலும் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு முயற்சி செய்ததன் காரணமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட நிலத்துடனான இந்த தேசிய பூங்காவில் மேற்கூறியவாறு காட்டு மிருகங்களுக்கு நிலம் இழககப்படுவதன் மூலம் அந்த மிருகங்கள் நிலைத்திருப்பதற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4.1.2 கவுருல்ல தேசிய பூங்கா


கவுடுல்ல தேசிய பூங்காவில் அனுமதியற்ற வேளாண்மை செய்கின்ற இடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாரம்பரியமாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலமாக பல ஆண்டுகளாக பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு வேண்டுதலானது தேசிய பூங்காக்கள் முகங்கொடுக்கின்ற பாரிய சிக்கலாக இருந்தது அதிகாரமற்ற வயல்களில் பயிர்ச் செய்கை செய்வது தொடர்பான விபரம் பின்வறுமாறாகும்.

**அட்டவணை இலக்கம் -10- கவுடுல்ல தேசிய பூங்காவில் அனுமதியின்றி வேளான்மை செய்தல்**

| அனுமதியின்றி வேளான்மை செய்யும் பிரதேசங்கள | அனுமதியின்றி வேளான்மை செய்யும் நிலத்தின் அளவு (ஏக்கர்கள் அண்ணளவாக) |
|---|---|
| பனஹபிடிய | 72 |
| பஹலவெவ | 42 |
| பளுவத்தன | 06 |
| | 120 |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன**


(அ) 2022 சனவரி 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரீட்சிப்பின் போதும் கவுடுல்ல தேசிய பூங்காவில் அனுமதியற்ற வேளாண்மை செய்தல் அவதானிக்கப்பட்டதுடன் மேற்கூறியவாறு 120 ஏக்கர்களுக்கு அண்மித்த பிரதேசத்தில் அனுமதியின்றி வேளான்மை செய்தல் மேற்க்கொள்ளப்பட்டிருந்தது மேற்கூறிய பிரதேசம் மேய்ச்சல் நிலமாக காணப்பட்ட பிரதேசம் என வெளிப்படுத்தப்பட்டதுடன் அக்காணி இழக்கப்பட்டமையானது நேரடியாக பூங்காவில் இருக்கின்ற மிருகங்களின் உணவு மற்றும் வதிவிடங்கள் குறைவடைவதற்கு தாக்கம் அளித்த விடயமாகும். நிகழ்காலத்தில் இதன் காரணமாக யானைகள் உணவினைத் தேடி கிராமங்களுக்கு வருதல் மற்றும் யானை மனித மோதல் தீவிரமடைவதற்கு காரணமான பிரதான விடயமாக உள்ளது.




**உருவப்படம் -10- கவுடுல்ல தேசிய பூங்காவில் அனுமதியற்ற வேளர்மை செய்யும் இடம்**

### 3.4.1.3 லுனுகம்வெஹர தேசிய பூங்கா

1995 ஆம் ஆண்டின் போது தேசிய பூங்காவாக வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து குடியிருப்பாளர் என தெரிவித்து பெரிய நிலஅளவில் மக்கள் குடியிருக்கின்றார்கள் என மற்றும் பூங்காக்களிலுள்ள காணிகளில் அனுமதியின்றி பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் மற்று




**உருவப்படம் - 11 லுனுகம்வெஹர தேசிய பூங்காவிற்குள் அனுமதியின்றி பயிர்ச் செய்கை பண்ணுதல் மற்றும் குடியிருத்தல்**

### 3.4.2 எல்லைப் பிரச்சினை காணப்படல்

வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் தேசிய பூங்காக்களை வர்த்தமானியின் மூலம் வெளியிடும் போது அவற்றின் எல்லைகளைத் தீர்மானித்து எல்லைக் கற்களை அமைத்து அடையாளமிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.4.2.1** லுனுகம்வெஹர தேசிய பூங்காவின் போகஹகுளம், தெவ்ரம் வெஹர, கரவிலே தம்பே பிரதேசத்தின் எல்லைகள் சம்பந்தமாக பிரச்சினைகள் இருந்தது என வெளிப்படுத்தப்பட்டதுடன் இந்த எல்லைப் பிரச்சினைகளை தீர்த்துவைக்காமையானது தேசிய பூங்காவின் நல்ல நிலைத்திருத்தலுக்கும் பாதுகாப்பிற்கும் பிரச்சினையானது என அவதானிக்கப்பட்டது.

**3.4.2.2.** லாகுகல தேசிய பூங்காவின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லையின் எல்லைகளில் பிரச்சினை காணப்பட்டது எனவும் இப்பூங்காவின் நிலத்திற்குரிய நிலங்களில் அனுமதியின்றி வேளாண்மை செய்தல் மற்றும் ஏனைய கமத்தொழில் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது எனவும் வெளிப்படுத்தப'பட்டதுடன் கிழக்கு எல்லையின் எல்லைகள் சரியாக அடையாளமிடப்படாமை இப்பிரச்சினைக்கு காரணமாக இருந்தது.

**3.4.2.3** ஹொரவ்பத்தான தேசிய பூங்காவினை வெளிப்படுத்தும் போது இயற்கையான எல்லைகளின் அடிப்படையில் அல்லாது GPS வாசிப்பு எண்ணின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள தேசிய பூங்கா என்பதனால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் பூங்காவிற்கு அருகாமையில் சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது விவசாயிகளால் தேசிய பூங்காவின் காணிகளை சவீகரித்தல் மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்பட்டத. தற்பொழுது எல்லைகள் அடையாளமிடப்பட்டதானது 10 கிலோ

மீற்றர் அளவான பிரதேசமாக இருந்ததுடன் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக உரிய உத்தியோகத்தர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

### 3.4.3 மாடுகளை பூங்காவிற்குள் அனுமதியின்றி உட்படுத்துதல் மற்றும் மாட்டுப் பண்ணைகளைப் பேணுதல்

2009 இன் 22 ஆம் இலக்க வன மிருகங்கள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் (9)(5) ஆம் பிரிவின் பிரகாரம் எவராவது ஒரு நபரினால் மனைசார்ந்த மிருகங்களை தேசிய சரணாலயத்திற்கு எடுத்துச் செல்லுதல் அல்லது அவ்வாறான ஒரு மிருகத்தினை அவ்வாறான நிலத்தில் வேட்டையாடச் செல்வதற்கு இடமளிக்காதிருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் அதனை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 3.4.3.1 மின்னேரியா தேசிய பூங்கா

அனுமதியற்ற மாடுகள் (எருமை மாடுகள் மற்றும் பசு மாடுகள்) 500 - 700 இற்கும் இடைப்பட்ட அளவானவை தேசிய பூங்காவினுள் தொடர்ச்சியாக நடமாடுகின்றது என புள்ளிவிபர தரவுகளின் பிரகாரம் தெளிவாகின்றது. இது பூங்காவில் புற்களை உணவாகக் கொள்ளும் மிருகங்களுக்கு அதிக அளவில் அச்சுறுத்தலாக இருந்ததுடன் பயிர் முறைமைக்கும் கூடுதல் தாக்கத்தினை ஏற்படுத்தும். அதற்கிணங்க இந்த மாடுகள் புற்கதிர்களை சாப்பிடும் முறைமையில் அவை மீண்டும் வளர்வதற்கு நீண்டகாலம் எடுக்கின்றது எனவும் பசுக்களினால் மேய்ச்சல் நிலத்திற்கு சேதம் ஏற்படுகின்றது எனவும் வெளிப்படுத்தப்பட்டதுடன் கணக்காய்வு வெளிக்கள பரீட்சிப்பின் போது இது பற்றி மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. இப்பிரச்சினையானது பல தேசிய பூங்காக்ளுக்கான ஒரு பிரச்சினையாக உள்ளதனால் அதற்காகவும் மனை சார்ந்த பசுக்களின் உணவைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறைக்காகவும் நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### 3.4.3.2 கவுடுல்ல தேசிய பூங்கா

இது சம்பந்தமான அவதானிப்புக்கள் பின்வருமாறாகும்.

(அ) மனைசார்ந்த மாடுகள் 1500 அளவில் இப்பூங்காவில் இருக்கின்றது எனவும் அவை பூங்காவில் வாழ்கின்ற புற்களை உணவாகக் கொள்ளும் மிருகங்களுக்கு அதிக அச்சுறுத்தலாக உள்ளது எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) தேசிய பூங்காவில் அனுமதியின்றி மாட்டுப் பண்ணைகள் பேணிவரப்படுகின்றது என கணக்காய்வு வெளிக்கள பரீட்சிப்பின் போது உறுதிப்படுத்தப்பட்டதுடன் தேசிய பூங்காவினுள் இவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் இடம்பெறுவதனை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் இடம்பெற வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) பூங்காவினுள் உயிர்வாழ்கின்ற மிருகங்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவான மேய்ச்சல் நிலங்கள் உள்ளதுடன் அந்த மேய்ச்சல் நிலங்களிலும் ஆக்கிரமித்தல் பயிர்கள் பரவுதல், அனுமதியற்ற பயிர்ச் செய்கை மேற்கொள்ளல், குளங்கள் புனரமைப்புச் செய்யப்படாமை போன்ற பல பிரச்சினைகள் உருவாகியிருந்ததுடன் அந்த மட்டுப்படுத்தப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் மனைசார்ந்த மாடுகளும் வருகை தந்து புற்கதிர்களை மேய்தலானது தேசிய பூங்காவின் நிலைத்திருக்கின்றமைக்கு அச்சுறுத்தலாக உள்ளதனால் இத்தேசிய பூங்கா நிலைத்திருப்பதற்காக பொறுப்புக்கூற வேண்டிய தொடர்புபட்ட அனைத்து நிறுவனங்களும் ஒருங்கிணைந்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.




**உருவப்படம் -12 அனுமதியற்ற மாட்டுப் பண்ணைகள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்ட பிரதேசம்**

(ஈ) இத் தேசியபூங்கா ஆசிய யானைகளின் (*Elephas Maximus*) இயற்கையான நடத்தைப் போக்கின் அழகினை பார்க்ககூடிய ஒரு இடம் எனவும் நீர்த்தேக்கங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள மேய்ச்சல் நிலங்கள் யானைகளுக்கு பெரிய ஒரு உதவி என வெளிப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு வகையான மேய்ச்சல் நிலங்களுடனான இந்த சுற்றாடல் முறைமையினை பேணிப்பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.4.3.3 கலாவெவ தேசிய பூங்கா

அனுமதியின்றி கலாவெவ தேசிய பூங்காவிற்குள் செல்லுகின்ற மாடுகள் 5,000 இற்கு அண்மித்த அளவில் இருக்கின்றது எனவும் அதன் காரணமாக காட்டு யானைகளின் உணவிற்காக காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்களின் அளவு இழக்கப்படுதல், மாட்டு கால்களால் புற்கள் தாவரங்கள் அழிவடைதல், புற்கதிர்களின் மூலம் காட்டு மிருகங்களுக்கு நோய் பரவுதல் (வாய்நோய், கால்நோய்) ஏற்படலாம் என வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே இந்த பூங்காவினுள் அனுமதியற்ற மாட்டுப் பண்ணை பேணிவரப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.







**உருவப்படம் - 13 கலாவெவ தேசிய பூங்காவினுள் மாட்டுப் பண்ணைகள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்ட பிரதேசம்**

### 3.4.3.4 லுனுகம்வெஹர தேசிய பூங்கா

கிராம வாசிகளால் மனைசார்ந்த மாடுகள் அதிக அளவானவை பூங்காவிற்குள் உட்படுத்தப்பட்டு குளத்து மைதானங்களிலுள்ள புற்களை உணவாகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுவதுடன் அனுமதியற்ற-11 மாட்டுப் பண்ணைகள் இந்த பூங்காவினுள் பேணப்படுகின்றது என வெளிப்படுத்தப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை 16 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் இந்த மாட்டுப் பண்ணைகள் இன்னும் அவ்வாறே பேணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.



**உருவப்படம் -14 லுனுகம்வெஹர தேசிய பூங்காவில் உள்ள அனுமதியற்ற மாட்டுப் பண்ணைகள்**

### 3.4.3.5 லாகுகல தேசிய பூங்கா

லாகுகல தேசிய பூங்காவின் கிழக்கு எல்லையில் மனைசார்ந்த மாடுகள் தேசிய பூஙாவிற்குள் செல்கின்றது எனவும் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அந்த நிலைமையானது கட்டுப்படுத்த முடியாத பிரச்சினையாக மாறியுள்ளது எனவும் வெளிப்படுத்தப்பட்டது. தேசிய பூங்காவினுள் இருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட மேய்ச்சல் நிலங்களிலுள்ள புற்கள் அதிக அளவானவை மாடுகளினால் உணவாக எடுத்துக் கொள்ளப்படுவதனால் தேசிய பூங்காவில் இருக்கின்ற ஏனைய பயிர் உண்ணும் மிருகங்களுக்கு உணவு இல்லாமல் போதல் அல்லது குறைவடைதல் இடம்பெறுகின்றது என அவதானிக்கப்பட்டது.

மின்னேரியா, கவுடுல்ல, கலாவெவ, லுனுகும்வெஹர, லாகுகல ஆகிய தேசிய பூங்காகளுக்குள் அனுமதியின்றி மனைசார்ந்த மாடுகள் உட்செல்வதன் காரணமாக மேய்ச்சல் நிலங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மிகவும் அதிக அளவிலானதுடன் தேசிய பூங்காவிற்குள் வசிக்கின்ற புற்களை உணவாகக் கொள்ளும் மிருகங்களின் உணவின் அளவு குறைவடைதல், காட்டு யானைகள் கிராமத்திற்குள் வருதல், பயிர்ச் சேதம், உயிர்ச் சேதம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

### 3.5 ஏனைய காரணிகள்

இலங்கையின் சுற்றாடல் முறைமையை சமத்துவமாக பேணுவதற்கு தாக்கமளிக்கும் காரணிகளுக்கு மத்தியில் மனித செயற்பாடுகள், பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்கள், பல்வேறு இயற்கை காரணிகள், பிரதானமாக முக்கியத்துவமானதாக உள்ளதுடன் தெரிவுப் பரீட்சிப்பிற்கு உள்ளாகிய சில தேசிய பூங்காக்கள் சிலவற்றின் அவ்வாறான தாக்கங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

#### 3.5.1 ஹோட்டன் சமவெளி தேசிய பூங்கா

ஹோட்டன் சமவெளி தேசிய பூங்காவில் காணப்படுகின்ற பிரதான மிருகப் பிரிவாக கடம்பை மான்கள் (*Cervus unicolour)* புலிகள் (*Panthera Pardus Kotiya)* சிகப்பு முக குரங்குகள் (*Semnopituecus.vetuls Monticola)* புள்ளி மான்கள் (*Muntiacus Muntjalc Malabaricus)* மர அணில் (*Ratufa Macrour)* வரிப் புலிகள் (*Felis rabiginosa)* காட்டுப் பன்றிகள் (*Sus Scrof)* முயல்கள் (*Lepus nigricollis)* முதலிய மிருகங்கள் பூங்காவில் அடிக்கடி நடமாடும் மிருகங்களாக இருந்ததுடன் இந்த மிருகங்களை பாதுகாப்பதற்கு வனசீவராசிகள் திணைக்களத்தின் மூலம் முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தும் அனுமதியின்றி வேட்டையாடுதலானது இந்த மேய்ச்சல் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டது என உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டது.

மனிதர்களால் மேற்கொள்ளப்படுகின்ற அலட்சியமான செயற்பாடுகளின் காரணமாக ஹோட்டன் சமவெளி தீப்பிடித்தல் இடம்பெறுவதுடன் அதன் மூலம் மேய்ச்சல் நிலத்திற்கும் வனாந்திரத்திற்கும் பாரியளவு சேதம் ஏற்படுகின்றது. 1989 ஆம் ஆண்டில் அவ்வாறு ஏற்பட்ட தீயினால் வனாந்திரங்களுக்கும் பரவி பாரிய அழிவுகள் ஏற்பட்டிருந்ததுடன் நிகழ்காலத்தில் வனசீவராசிகள் திணைக்களத்தினால் காட்டுக்கு தீவைத்தல் சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் குறித்த அளவிற்கு கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

கணக்காய்வினால் வெளிக்களப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டதானது 2021 ஒக்தோபர் மாதம் அதாவது சுற்றுலாப் பயணிகள் மிகவும் குறைவான காலத்திலான போதிலும் பல இடங்களில் சுற்றுலா பயணிகளால் பயன்படுத்தப்பட்ட முக மறைப்புக்கள் மேய்ச்சல் நிலத்தில் போடப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்ததுடன் அவ்வாறான செயற்பாடுகள் தேசிய பூங்காவின் சுற்றாடல் முறைமைகளின் சமநிலைத் தன்மையை பேணுவதற்கு தடையாக அமையும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5.2 மின்னேரியா தேசிய பூங்கா

#### 5.3.2.1 மொரகஹகந்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் மேய்ச்சல் நிலங்களுக்கு இடம்பெறுகின்ற தாக்கங்கள்

கவுடுல்ல தேசிய பூங்கா, மின்னேரியா தேசிய பூங்கா, ஹுருலு தேசிய பூங்கா ஆகிய 03 தேசிய பூங்காக்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டின் தொடக்கத்தில் இயற்கையான காலநிலை போக்கிற்கு இணங்க காட்டு யானைகளின் புலம்பெயர்வுகள் பின்வரும் முறைமையில் இடம்பெறுகின்றது என வெளிப்படுத்தப்பட்டது.

**அட்டவணை இலக்கம் 11 இயற்கையான காலநிலை போக்கிற்கு இணங்க காட்டு யானைகளின் புலம்பெயர்வுகள்**

| காட்டு யானைகள் புலம்பெயர்கின்ற காலப்பகுதி | தேசிய பூங்கா |
|---|---|
| மே, யூன், யூலை, ஆகஸ்ட், ஒக்தோபர் மாதத்தின் நடுப்பகுதி | மின்னேரியா தேசிய பூங்கா |
| ஒக்தோபர், நவம்பர், திசெம்பர், சனவரி நடுப்பகுதி | கவுடுல்ல தேசிய பூங்கா |
| சனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் அரைப்பகுதி | ஹுருனு தேசிய பூங்கா |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மின்னேரிய தேசிய பூங்காவினுள் மேற்கூறிய காலப்பகுதியில் காட்டு யானைகள் வருகை தருவதாவது கவுடுல்ல மற்றும் மின்னேரியா குளத்து மைதானங்களில் உள்ள புற்களை உணவாக எடுத்துக்கொள்வதனை அடிப்படையாகக் கொள்ளும் அடிப்படையில் என வெளிப்படுத்தப்பட்டது. மேற்கூறிய காலப்பகுதியில் இக்குளங்களின் நீர் குறைவடைவதுடன் 1,000 ஹெக்டயர் அளவான பிரதேசத்தில் புற்கள் கொளுந்துவிட்டு வளர்கின்ற காலப்பகுதியில் காட்டு யானைகள் இப்புற்களை உணவாக எடுத்துக்கொள்வதில் மிகவும் விருப்பமாக இருப்பதனால் இப்பூங்காவினை நோக்கி புலம்பெயர்கின்றன என வெளிப்படுத்தப்பட்டது. மொறகஹகந்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் காரணமாக இயற்கையான காலநிலை போக்கினை மீறி ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக குளங்களில் நீர் நிரப்பியிருப்பதன் காரணமாக காட்டு யானைகள் பழக்கப்பட்டதான புலம் பெயர்வு மற்றும் நடத்தைப் போக்கிற்கு நேரடியாக தாக்கமளித்துள்ளது எனவும் இதன் காரணமக காட்டு யானைக் கூட்டங்கள் பல்வேறு பிரதேசங்களுக்கு விசேடமாக வெலிகந்த, திம்புலாகல,

சோமாவதிய மற்றும் சரணாலயங்களுக்கு புறம்பான பிரதேசங்களுக்கு உணவுகளைத் தேடி புலம்பெயர்தலினை ஆரம்பித்துள்ளதுடன் இதன் காரணமாக யானை மனித மோதல் அதிகரித்துள்ளது என்பதற்கு கடந்த ஆண்டுகளின் காட்டு யானை பாதிப்பு தரவுகளின் பகுப்பாய்வின் போது அவதானிக்கப்பட்டத. அவ்வாறே மொரகஹவத்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் காரணமாக மின்னேரியா மற்றும் கவுடுல்ல தேசிய பூங்காக்களுக்கு வருடாந்தம் யானைகள் ஒன்று சேர்தல் (Area Elephant Gathering) குறைவடைந்துள்ளது என வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) இயற்கையான காலநிலை போக்கிற்கு இணங்க ஏப்ரல் மாதத்திலிருந்து ஒக்தோபர் மாதம் வரை இந்த நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் படிப்படியாக குறைவடைய வேண்டிய போதிலும் மொறகஹகந்த நீர்த் தேக்க செயற்திட்டத்தின் மூலம் அடிக்கடி 70 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் இந்த நீர்த்தேக்கங்களின் நீர் நிரம்புவதன் காரணமாக காட்டு யானைகளுக்குத் தேவையான உணவுகளுக்கான புற்றரைகள் இல்லாமல் போகின்றது என அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக அவைகளுக்குத் தேவைப்படுகின்ற உணவுகள் மற்றும் வதிவிடங்கள் இல்லாமல் போதல் யானை மனித மோதலுக்கு இடமளிப்பதனைப் போல நேரடியாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைவதற்கும் தாக்கமளித்துள்ளது என வெளிப்படுத்தப்பட்டது.

(இ) மொறகஹகந்த செயற்திட்டத்தின் காரணமாக மின்னேரியா தேசிய பூங்காவிற்கு வருகை தருகின்ற யானைகளின் அளவு குறைவடைந்துள்ளது என முன்னாள் வனசீவராசிகள் பணிப்பாளரினால் யானைகளின் இயற்கையான நடத்தைப் போக்கு தொடர்பாக 2016 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அதற்காக மின்னேரியா தேசிய பூங்காவிற்கு யானைகள் அதிகமாக வருகை தருகின்ற 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்திலிருந்து அவதானிப்புக்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **மாதம்** | **யானைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 2016 | செப்தெம்பர் | 389 |
| 2017 | செப்தெம்பர் | 402 |
| 2018 | செப்தெம்பர் | 354 |
| 2019 | செப்தெம்பர் | 223 |
| 2020 | செப்தெம்பர் | 210 |
| 2021 | செப்தெம்பர் | 20 |
| 2022 | செப்தெம்பர் | (எண்ணப்பட்டு வருகின்றது) |

(Elephant Researcher Studying the Social Behavior of elephants in the minneriya kaudulla population)

மேற்கூறிய தரவுகளின் பிரகாரம் யானைகளின் வருகை தீவிரமாக குறைவடைந்ததனை காணக்கூடியதாக உள்ளதுடன் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 95 சதவீதத்தினால் யானைகளின் வவருகை குறைவடைந்துள்ளது. இதற்கிணங்க யானைகளுக்குத் தேவையான உணவுகள் தட்டுப்பாடாகியுள்ளதனால் 2021 ஆம் ஆண்டினைவிட 2022 ஆம் ஆண்டில் யானைகள் மெலிந்திருந்தமை அவதானிக்கப்பட்டது என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு உணவு தட்டுப்பாடாகியமை பெண் மிருகங்களுக்கு தாக்கமளித்துள்ளதனூடாக புதிதாகப் பிறக்கும் யானைக் குட்டிகளும் போசாக்கு குறைவுக்கு உட்படுகின்றன எனவும் அது அவற்றின் வளர்ச்சிக்கு அச்சுறுத்தல் எனவும் குறிப்பிடப்படடிருந்தது இந்த துரதிஷ்டமான நிலைமைக்கு துரிதமாக தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக நீர்ப்பாசனத் திணைக்களமும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களமும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்து பொருத்தமான தீர்வினை உடனடியாக எடுக்க வேண்டும் எனவும் அவ்வாறு இல்லையாயின் போசாக்கின்மையின் காரணமாக அதிக அளவான யானைகள் மரணமடைவதற்கு வாய்ப்புள்ளது என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த உணவுத் தட்டுப்பாட்டிற்கு குளத்து மைதானங்களில் மேய்ச்சல் நிலத்தின் அளவு இழக்கப்படுதல் பிரதானமாக தாக்கமளித்துள்ளது என அவதானிக்கப்பட்டது.

**(ஈ) யானைகளால் பயிர்ச்செய்கைகள் சேதமாக்கப்படுதல்**

இந்த (ஆராய்ச்சி) அறிக்கைக்கு இணங்க 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை ஆதனங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகள் சேதமடைதல் சம்பந்தமான விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பயிர்ச் செய்கை சேதங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 06 |
| 2016 | 02 |
| 2017 | 04 |
| 2018 | 22 |
| 2019 | 30 |

இதற்கிணங்க இச்செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போது சுற்றாடல் நிலைமைகள், வனசீவராசிகளின் நடத்தைப் போக்கு, கமத்தொழில் முதலிய பிரிவுகள் தொடர்பாக

ஒப்பீட்டு ரீதியாக கவனம் செலுத்தாமை இவ்வாறான சிக்கல் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது

(Elephant Researcher Studying the Social Behavior of elephants in the minneriya kaudulla population முன்னாள் வன சீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளரின் ஆராய்ச்சி அறிக்கைகளிலிருந்து பொழிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது.)

### 3.5.3 கவுடுல்ல தேசிய பூங்கா

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கடுவுல்ல தேசிய பூங்காவில் உள்ள இரண்டு குளங்கள் புனரமைக்கப்படாமை**

தேசிய பூங்காவினுள் உள்ள வெஹெரகல குளம் மற்றும் ஒலுமடுவ குளத்தினை புனரமைப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தும் இன்று வரை அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அக்குளங்களுக்கு அருகாமையிலுள்ள குளத்து மைதானங்களில் புல் விரிவடைதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்குளத்திற்கு அருகாமையிலுள்ள குளத்து மைதானம் பயிர் உண்ணும் மிருகங்களின் உணவு மற்றும் வதிவிடத்தை வழங்குகின்ற இடமாக இருப்பதனால் அந்த இடங்களை துரிதமாக புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பொறகஹகந்த நீர்த் தேக்க செயற்திட்டத்தின் மூலம் கவுடுல்ல குளத்தின் நீர்மட்டம் தொடர்பாக உருவாகியுள்ள பாதிப்புக்கள்**

மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் மூலம் கவுடுல்ல குளத்திற்கு தொடர்ச்சியாக நீர் வழங்குவதனால் ஆண்டு முழுவதும் நீர் நிரப்பியிருப்பதன் காரணமாக குளத்து மைதானத்தில் அண்ணளவாக 1,000 ஹெக்டயருக்கு அண்மித்த பிரதேசத்தில் காணப்பட்ட மேய்ச்சல் நிலம் மிருகங்களுக்கு இழக்கப்பட்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது. இயற்கையான காலநிலை போக்கிற்கு குளத்து நீர் நிரம்பியிருத்தல் மற்றும் நீர் ஆவியாகுதல் ஆதிகாலத்திலிருந்து இடம்பெறும் இயற்கை சுழற்சியானதுடன் இந்த நீர்த்திட்ட செயற்திட்டத்தின் மூலம் இயற்கை நடைமுறைகளுக்கு புறம்பாக நீர் வழங்குவதன் காரணமாக காட்டு மிருகங்கள் இந்த அச்சுறுத்தலுக்கு முகங்கொடுப்பதுடன் உரிய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து கலந்தாலோசித்து துரிதமாக ஒரு தீர்வினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவதானிக்கப்பட்டது.

### 3.5.4 கலாஓயா தேசிய பூங்கா

#### 3.5.4.1 தேசிய பூங்காவாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்காமை

(அ) வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கஹல்லபல்லேகெலே சரணாலயம், குருனாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளதுடன் 21,690 ஹெக்டயர் பரப்பளவானதுடன் 556/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 1989 யூலை மாதம் 11 ஆந் திகதி வெளியிடப்பட்டது. இந்த கஹல்லபல்லேகெலே சரணாலயத்தில் கலாவெவ மற்றும் பலலுவெவ அமைந்துள்ளதுடன் அந்த இரண்டு நீர்த்தேக்கங்களுள் அவை சார்ந்த பிரதேசங்களின் 5,044.97 ஹெக்டயர் அளவானவை வனசீவராசிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தேவைப்பாட்டிற்காக தற்பொழுது காணப்படுகின்ற சரணாலயத்தினை தேசிய பூங்காவின் தரத்திற்கு உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க 2015 ஒக்தோபர் மாதம் 17 ஆந் திகதி நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சினால் கலாவெவ தேசி பூங்கா திறக்கப்பட்டது. எனினும் கணக்காய்வுத் திகதி வரை வர்த்தமானியின் மூலம் சட்டரீதியாக வெளியிடப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) வசீ/வடமேல்/04/02/682/2020 ஆம் இலக்க 2020 யூலை 23 ஆந் திகதிய உதவிப் பணிப்பாளரின் (வடமேல்) கடிதத்தின் பிரகாரம் உத்தேச வரைபு சட்ட வரைஞருக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் உத்தேச கலாவெவ தேசிய பூங்காவின் எல்லைக்குரிய பிரதேசத்தில் அரசாங்க காணியையும் தனியார் காணியையும் தனித்தனியாக இனங்கண்டு உரிய அறிக்கையினையும் திட்ட வரைபடத்தினையும் வழங்குமாறு மாவட்ட நில அளவை அத்தியட்சகரின் (அனுராதபுரம் ) எழுத்துமூல வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான பதிலாக 2021 மே 12 ஆந் திகதிய 11/ம/06/கலாவெவ தேசிய பூங்கா/2021/ Cost ஆம் இலக்க அறிக்கையானது சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகரினால் உதவி பணிப்பாளர் வனசீவராசிகள் பாதுகாப்பு வலய அலுவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் உரிய நிலஅளவைக் கட்டணமாக ரூபா 54,528,876 தொகை தேவைப்படுகின்றது என தெரியப்படுத்தியிருந்தும் இன்று வரை அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.4.2 கலாவெவ நீர் மட்டம் அதிகரித்ததன் காரணமாக தேசிய பூங்காவிற்கு ஏற்படும் தாக்கம்- 2016 ஆம் ஆண்டின் பின்னர் கால எல்லை

இக்கால எல்லையின் போது பின்வரும் நிலைமைகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சிறிய அளவிலான நீர் மின்சார செயற்திட்டம்**

தம்புளு ஓயா சிறிய அளவிலான நீர் மின்சார செயற்திட்டத்தின் கீழ் இப்பன்கடுவ நீர்த்தேக்கத்தின் நீரினைப் பயன்படுத்தி நீர் மின்சாரத்தை உருவாக்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த சிறிய அளவிலான நீர் மின் நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்ற நீர் தம்புளு ஓயாவினூடாக கலாவெவவில் ஒன்று சேர்க்கப்படுதல் இடம்பெறுவதனால் கலாவெவவின் நீர்மட்டம் அதிகரிக்கின்றது. இக்காரணத்தினால் குளத்தின் குளத்து மைதானம் இழக்கப்பட்டு யானைகள் முதன்மையாக காட்டு மிருகங்களுக்குத் தேவையான உணவுகள் இல்லாமல் போகும் ஆபத்து உள்ளது என அவதானிக்கப்பட்டது.

**(ஆ) நீர்ப்பாசன திணைக்களத்தினால் நீரினை வழங்குதல்**

நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் விவசாய நடவடிக்கைகளுக்காக மற்றும் அனுராதபுர நககரத்திலுள்ள மக்களின் குடிநீர் தேவைப்பாட்டிற்காக நாச்சியாதீவு மற்றும் திஸாவெவவிற்கு நீரினை வழங்குவதற்கு ஆண்டு முழுவதும் கலாவெவ மற்றும் பல்லுவெவ குளங்களில் உச்ச அளவு நீர் மட்டம் பேணப்படுகின்றது.




**உருவப்படம் - 15 நீர்ப்பாசன திணைக்களத்தினால் நீரினை வழங்குதல்**

இதன் காரணத்தினால் யானைகள் முதன்மையாக காட்டு மிருகங்களுக்கு உணவுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குத் தேவையான மேய்ச்சல் நிலங்கள் திறந்ததாக இல்லாமை மற்றும் கலாவெவ குளத்திற்கு அருகாமையில் சுதந்திரமாக நடமாடுவதற்குத் தேவையான இடவசதிகள் இல்லாமையின் காரணமாக காட்டு யானைகள் இரவு நேரங்களைப் போல பகல் வேளைகளிலும் கிராமங்களுக்குள் வந்து கிராமவாசிகளின் பயிர்ச்செய்கை நிலங்கள் மற்றும்

ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் மற்றும் மக்களின் உயிர்களுக்கும் சேதம் ஏற்படுத்துதல் வேகமாக அதிகரித்துச் செல்வதனால் காட்டு யானைகள் மனிதர்கள் மோதல் தீவிரமடைந்துள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் பெறுமதியான கொம்பன் யானைகள் உணவுகளைத் தேடி கிராமத்திற்குள் வருவதனால் கொக்கிராவ இலுகேகம சோளச் சேனைக்கு போடப்பட்டிருந்த மின்சாரம் தாக்கி மரணமடைந்திருந்தது.




**உருவப்படம் - 16 - மின்சாரம் தாக்கி மரணமடைந்த ரேவத எனும் பெயருள்ள கொம்பன் யானை**

**(இ) மின்சார வேலிகள் செயற்படாதுள்ளமை**

கலாவெவ மற்றும் பலலுவெவ நீர்மட்டம் அதிகரித்துச் வெசல்வதன் காரணமாக கலாவெவ மற்றும் பல்லுவெவ இனைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார வேலிக்கு அண்மித்ததாக நீர் மட்டம் வருதல் இடம்பெற்றிருந்ததுடன் சில இடங்களில் (ஒலன்வெவ, ஹோரா பொல) மின்சார வேலி நீரினால் மூடப்பட்டிருந்ததனால் மின்சார வேலிக்கு அருகாமையில் நீர் வந்ததன் காரணமாக காட்டு யானைகளுக்கு கலாவெவ மற்றும் வலலுவெவ இற்கு அருகாமையிலுள்ள வதிவிடங்கள் மற்றும் நடமாடும் பாதைகள் இல்லாமல் போயுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே தற்பொழுது காணப்படுகின்ற மின்சார வேலிக்கு அருகாமையிலேயே பிரதேசத்திலுள்ள மக்கள் அனுமதியின்றி காணிகளை கைப்பற்றி பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையும் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.5.4.3 கலாவெவ தேசிய பூங்கா சம்பந்தமான பொதுப் பிரச்சினை

கலாவெவ தேசிய பூங்காவின் பௌதீக மற்றும் நிதி வசதிகளின் பிரச்சினையைப் போல தேசிய பூங்காக்களை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான பின்வரும் பொதுச் சிக்கல் நிலைமையின் காரணமாக தேசிய பூங்காவிற்குள் உள்ள மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல் ஆக்கபூர்வமாக இடம்பெற்றிருக்கவில்லை.

பின்வரும் பொதுப் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கலாவெவ தேசிய பூங்காவிற்கு நுழைவு வாயில் இல்லாததுடன் ஒரு அலுவலக கட்டிடம் இல்லாது வாடகைக்கு எடுத்துக்கொண்ட ஒரு வீடு தற்பொழுது அலுவலகமாக பேணப்பட்டு வருகின்றது. விஜிதபுர மற்றும் கல்கிரியாகம ஆகிய இரண்டு நுழைவு வீதிகளில் கொள்கலன் பெட்டிகளில் தயாரிக்கப்பட்ட 02 தற்காலிக அலுவலகங்கள் முன்னர் காணப்பட்டிருந்தும் அவை தற்பொழுது மூடப்பட்டுள்ளது.

(ஆ) கலாவெவ தேசிய பூங்காவிற்கு போதியளவு வாகன வசதிகள் இல்லை என அவதானிக்கப்பட்டன.

(இ) கலாவெவ தேசிய பூங்காவானது பெயர்பலகைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் எந்த ஒரு மேம்பாட்டுச் செயற்பாடு, பேணிப்பாதுகாத்தல், பராமரித்தல் மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வு வெளிக்கள பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் முதலாவதாக கணக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் சட்ரீதியான தன்மையை பெற்று இந்த தேசிய பூங்கா முகங்கொடுக்கும் பிரச்சினைகளை நீர்பாசன திணைக்களம், மஹாவெலி அதிகாரசபை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுடன் இணைந்து அப்பிரச்சினையை துரிதமாக திர்த்துவைக்க வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

(ஈ) இந்த தேசிய பூங்காவினுள் இருக்கும் பெறுமதியான கொம்பன் யானைகள் உள்ளடங்கலாக காட்டு யானை வளங்களை பேணிப் பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதன் மூலம் சுற்றுலா கைத்தொழில் மற்றும் அதனுடன் இணைந்த தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கான இயலுமை காணப்பட்டிருந்தும் அதற்காக எந்த நடவடிக்கையும் உரிய நிறுவனத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.




**உருவப்படம் -17 கலாவெவ தேசிய பூங்காவின் நுழைவுப் பாதை**

### 3.5.5 லாகுகல தேசிய பூங்கா

#### 3.5.5.1 லாகுகல தேசிய பூங்காவின் சுற்றாடல் நிலைமை தொடர்பாக ஒரு தரவு முறைமை இல்லாமை

தேசிய பூங்காவின் இயற்கை சுற்றாடல் நிலைமை, அதில் வசிக்கின்ற மிருகங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய ஒரு முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக தேசிய பூங்காவிற்கு தாக்கமளிக்கும் மழைவீழ்ச்சி போக்கு, வறட்சியான காலநிலை, புலம்பெயர் யானைகள் வருகின்ற காலப்பகுதி, யானைகளின் எண்ணிக்கை, யானைக்குட்டிகளின் எண்ணிக்கை, விசேட உடல்சார்ந்த பண்புகள் உள்ள யானைகளின் எண்ணிக்கை, இயற்கையான யானைகளின் எண்ணிக்கை, இயற்கையான குளங்கள், நீர் கொள்ளளவு, குளத்து மைதானங்களின் நில அளவு, வறட்சியான காலத்தில் குளத்து மைதானத்தின் நில அளவு, அந்த குளத்து மைதானங்களில் இருக்கின்ற மிருகங்களுக்கு உணவினைப் பெற்றுக்கொள்வதற்கு யானைகள் வருகை குறைவடையுமாகவிருந்தால் அதற்கான காரணம், ஆக்கிரமிக்கும் மிருகங்களின் வருகை தொடர்பான தகவல்கள், மிருகங்களை பீடிக்கும் நோய்கள் ஆக்கிரமிக்கும் பயிர் பரவும் போக்கு , புதிதாக இனங்காணப்பட்ட பயிர்வகை, உயிரினங்கள் தொடர்பான விபரம் முதலியன ஒரு தேசிய பூங்காவினுள் காலரீதியாக இடம்பெறுகின்ற மாற்றங்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்து அறிக்கையிட்டு வைத்துக்கொள்ளுதல் மிகவும் முக்கியமானது என இந்த தேசிய பூங்காவின் பௌதீக கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு தரவு முறைமையினைப் பேணுவது தேசிய பூங்காவினுள் உள்ள மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாக்கும் போது அதே போல மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் சம்பந்தமாக பல்வேறு செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போதும் முக்கயமானதாகும்.

### 3.5.5.2 ஹெட ஓயா நீர்ப்பாசன செயற்திட்டத்தால் இடம்பெறுகின்ற தாக்கங்கள்

அம்பாறை மாவட்டத்தில் லாகுகல மற்றும் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் லாகுகல, பானம, பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நிர்ப்பாசன நீரினை வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு இச்செயற்திட்டம் 2013 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டது. இச்செயற்திட்டத்தின் கீழ் ஹெடஓயாவினூடாக நிர்மாணிக்கப்பட்ட அணையில் நீரினைச் சேகரித்து ஹெட ஓயாவின் இடது கரையிலிருந்து வரும் கால்வாயினூடாக மஹவெவவிற்கு நீரினை நிரப்புதல் மற்றும் குளத்தின் நீர் வழிந்தோடலினை உயர்த்தி அணைக்கட்டினை கட்டுதல் ஆகிய விடயங்களின் காரணமாக ஆண்டு முழுவதும் உச்ச அளவில் நீரின் கொள்ளளவினை வைத்திருந்ததனால் இயற்கையான காலநிலை போக்கிற்கு இணங்க குளத்தின் நீரினை குறைத்தல் அல்லது அதிகரித்தல் இடம்பெறவில்லை.




**உருவப்படம் -18 - ஹெடஓயாவின் இடது கரையிலிருந்து வரும் கால்வாய்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) மஹாவெவ குளத்தின் நீர் ஆண்டு முழுவதும் உச்ச அளவான நீர் இயலளவினைக் கொண்டிருத்தல்**

ஹெட ஓயா செயற்திட்டத்தின் மூலம் லாகுகல தேசிய பூங்காவில் அமைந்துள்ள மஹவெவ குளத்தின் நீர் ஆண்டு முழுவதும் உச்ச அளவான கொள்ளளவில் காணப்படுவதன் காரணமாக 2,670 ஏக்கர் அடி அளவான குளத்தின் பரப்பளவில் 2000 ஏக்கர் அடி அளவான குளத்து மைதானம் இழக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் இயற்கையான காலநிலை போக்கிற்கு இணங்க மழைக்காலத்தில் குளத்து நீர் நிரம்புதல் மற்றும் வறட்சிக் காலத்தில் நீர் குறைவடைந்து குளத்து மைதானம் பெரிதாக இலுருப்பதுடன் புற் கொழுந்துகள் வளர்வதுடன் யானைகள் விரும்புகின்ற புல் வகையான பெரு புல் வகை செழுமையாக பரவியிருந்தது என வெளிப்படுத்தப்பட்டது. இப்புல்வகை வளர்வதற்கு 1 ½ அடி அளவான நீர் தேவைப்படுகின்றது. லாகுகல தேசிய பூங்கா சுற்றுலா பயணிகளுக்கு மத்தியில் பிரசித்திபெற்று இருந்ததானது அதிக

அளவான யானைக் கூட்டங்களை பார்க்க கூடிய ஒரு தேசிய பூங்காவாக இருந்த போதிலும் தற்பொழுது இந்த பூங்காவிற்கு அந்த நிலைமை இல்லாமல் போயுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது.

**3.5.5.3 காட்டு யானைகள் கிராமத்திற்குள் வருதல் மற்றும் யானை மனித மோதல்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**

காட்டு யானைகளுக்கு தேசிய பூங்காவினுள் உள்ள குளத்து மைதானங்கள் இழக்கப்படுவதோடு உணவு தேடி கிரமத்திற்குள் வருதல் அதிகரித்துள்ளது என பின்வரும் தரவுகளுக்கு இணங்க அவதானிக்கப்பட்டது.

**(அ) காட்டு யானைகளால் ஏற்பட்ட பயிர்ச் செய்கை சேதம் தொடர்பான விபரம்**

| ஆண்டு | சேதத்திற்கு உள்ளாகிய சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2014 | 01 |
| 2015 | 01 |
| 2016 | 01 |
| 2017 | - |
| 2018 | - |
| 2019 | - |
| 2020 | 87 |
| 2021 | 216 |
| 2022 செப்தெம்பர் | 82 |

**(ஆ) காட்டு யானைகளால் ஏற்பட்ட ஆதன சேதம் தொடர்பான விபரம்**

| ஆண்டு | சேதத்திற்கு உள்ளாகிய சந்தர்ப்பத்தின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 | 02 |
| 2014 | 01 |
| 2015 | 01 |
| 2016 | - |
| 2017 | 01 |

| | |
|---|---|
| 2018 | - |
| 2019 | 10 |
| 2020 | 09 |
| 2021 | 13 |
| 2022 செப்தெம்பர் | 11 |

**(இ) யானை வெடி வழங்குதல்**

| **ஆண்டு** | **சத்த வெடிகள் சிறியது** | **சத்த வெடிகள் பெரியது** | **சமிக்ஞை (சிக்னல்) வெடிகள்** |
|---|---|---|---|
| 2011 | - | 720 | 50 |
| 2012 | - | 1525 | 275 |
| 2013 | - | 3450 | 630 |
| 2014 | - | 950 | 400 |
| 2015 | 50 | 3062 | 915 |
| 2016 | 450 | 4825 | 1475 |
| 2017 | 450 | 2145 | 1550 |
| 2018 | 2775 | 2475 | 2550 |
| 2019 | 5175 | 2350 | 2775 |
| 2020 | 3875 | 1875 | 2705 |
| 2021 | 3525 | 4010 | 2560 |
| 2022 செப்தெம்பர் | 2900 | 800 | 1750 |

சிறிய மற்றும் பெரிய சத்த வெடிகள் வழங்கப்படுவது கிராம வாசிகளுக்கு என்பதுடன் களஞ்சியத்தில் இருக்கின்ற அளவுக்கு இணங்க பெரியது சிறியதாக இரண்டு சத்த வெடிகள் ஒரு தடவையின் போது ஒரு நபருக்கு வழங்கப்படுகின்றது. சமிக்ஞை வெடி வழங்கப்படுவது வனசீவராசிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் படையணியின் யானைகளை விரட்டும் குழுக்களுக்கு மாத்திரமாகும். சாதாரண மக்களுக்கு சமிக்ஞை வெடிகள் வழங்கப்படுவதில்லை.

(ஈ) இதற்கிணங்க காட்டு யானைகளால் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கை தேசங்கள், ஆதன சேதங்கள் மற்றும் யானை வெடிகள் வழங்குதல் 2011 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியினை விட 2019, 2020 ஆம் ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என அவதானிக்கப்பட்டது.

**(உ) யானைகளின் இறப்பு எண்ணிக்கை**

| ஆண்டு | யானைகளின் இறப்பு எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| 2013 | 05 | | |
| 2014 | 11 | | |
| 2015 | 18 | | |
| 2016 | 13 | | |
| 2017 | 17 | | |
| 2018 | 15 | | |
| 2019 | 12 | 08 | 20 வயதிற்கு குறைந்த யானைகளின் மரணமானது ஹக்கபட்டாசினை உணவாக எடுத்துக் கொண்டதால் ஏற்பட்டிருந்தது. |
| 2020 | 08 | 03 | |
| 2021 | 04 | - | |
| 2022.09.05 திகதிய | 05 | 04 | |

லாகுகல தேசிய பூங்காவில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2022 செப்தெம்பர் 05 ஆந் திகதி வரை 108 யானை மரணங்களில் 20 வயதிற்கு குறைந்த யானைகளின் மரணங்களுக்கான பிரதான காரணமாக இருந்ததானது மனிதர்களால் வைக்கப்படுகின்ற ஹக்கபட்டாசுகளை உணவாக எடுத்துக்கொள்வது என வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு அதிஸ்டமற்ற வகையில் யானைகளின் மரணங்கள் இடம்பெறுவது உணவுகளைத் தேடி யானைகள் கிராமத்திற்கு செல்வதின் காரணத்திலாகும்.

**3.5.5.4 பேரு புற்களை செயற்கையாக நடுகை செய்தல்**

தேசிய பூங்காவிற்குள் மஹவெவ குளத்தில் பேரு புற்கள் அருகிப் போவதனால் அப் புற்களை விரிவடையச் செய்வதற்காக ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக பூங்காவில் இருக்கின்ற கிதுலான குளம், ரவும்வல, திம்பிரியவல ஆகிய சில இடங்களின் மொத்த நில அளவில் ஒரு ஏக்கர் அளவிற்கு பேரு புற்களை செயற்கையாக நடுதல் இடம்பெற்றிருந்தது.. அப்புற்கள் வெற்றிகரமாக நடுகை செய்யப்பட்டிருந்ததனை காணக்கூடியதாக இருந்ததுடன் பூங்காவிற்குள் காணப்படுகின்ற மாடுகள் இப்புற்களை உணவிற்கு எடுத்துக் கொள்வதனால் வளர்ந்துவரும் புற்களை பேணிப் பாதுகாப்பது சிக்கலாக இருந்தது.




**உருவப்படம் -19 பேரு புற்களை செயற்கையாக நடுகை செய்தல்**

### 3.5.5.5 மஹவெவ குளத்தின் குளத்து அணைக்கட்டு அரித்து செல்லப்படுதல்

ஹெட ஓயா செயற்திட்டத்தின் கீழ் கால்வாயின் மூலம் மற்றும் வழிந்து ஓடுவதனை உயர்த்துவதன் மூலம் குளத்தின் நீர் நிரம்புதல் மற்றும் தேக்கிவைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் குளத்தின் அணைக்கட்டினை வலுப்படுத்துதல் (குளத்தின் அலைதடுப்பு) மேற்கொள்ளப்பட்டிருக்காததனால் குளத்து அணைக்கட்டு உடைந்து காணப்பட்டதுடன் மழைகாலதம்தில் குளத்திற்கு நீர் சேருதல் அதிகரிப்பதோடு குளத்தின் அணைக்கட்டு உடைந்து போகும் அச்சுறுத்தல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. குளத்தின் அணைக்கட்டு உடைந்து நீர் வெளிச் செல்வதற்கு உட்படுவதனால் தேசிய பூங்கா நிலைத்திருப்பதற்கும் தடை ஏற்படுத்தக்கூடியதாக இருந்ததுடன் அதன் மூலம் தாழ்ந்த பிரதேசத்திலுள்ள மேய்ச்சல் நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாம் என அவதானிக்கப்பட்டது.




**உருவப்படம் - 20 - லாகுகல தேசிய பூங்காவிலுள்ள மஹவெவ குளத்தின் குளத்து அணைக்கட்டு**


### 3.5.6 லுனுகம்வெஹர தேசிய பூங்கா

#### 3.5.6.1 லுனுகம்வெஹர தேசிய பூங்காவினை பார்ப்பதற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகள் மற்றும் வருடாந்த வருமானம்

2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை பூங்காவினைப் பார்ப்பதற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளின் (உள்நாட்டு, வெளிநாட்டு) என்ணிக்கை மற்றும் வருமானம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. (பூங்கா கட்டணம், வாகன கட்டணம், சேவைக் கட்டணம், பங்களா கட்டணம், புடவை கட்டணம், அன்பளிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருத்தல்)

**அட்டவணை இலக்கம் - 12 - லுனுகம்வெஹர தேசிய பூங்காவினை பார்ப்பதற்கு வருகை தருகின்ற சுற்றுலா பயணிகள் மற்றும் வருடாந்த வருமானம்.**

| ண்டு | சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை | | இறக்குமதி சேர் வரி இல்லாது வருமானம் ரூபா |
|---|---|---|---|
| | உள்நாடு | வெளிநாடு | |
| 2017 | 5,786 | 3,345 | 7,489,992 |
| 2018 | 2,893 | 1,119 | 3,528,471 |
| 2019 | 2,204 | 647 | 2,369,115 |
| 2020 | 1,877 | 222 | 1,208,252 |
| 2021 | 1,936 | 49 | 817,700 |




**உருவப்படம் :- 21 லுனுகம்வெஹர தேசிய பூங்காவிற்கு சுற்றுலா பயணிகளின் வருகை**

.

(அ) மேற்கூறிய வருமான அறிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது சுற்றலா பயணிகளின் அதிகரிப்பும் அதிக வருமானமும் அரசாங்கத்திற்கு கிடைத்திருந்தும் 2019 ஆம் ஆண்டிலிருந்து அடிக்கடி காணப்பட்ட சீரற்ற காலப்பகுதியின் காரணமாக வருமானம் குறைவடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது 90 சதவீதத்திற்கு அண்மித்த அளவான வருமானத்தில் குறைவு ஏற்பட்டிருந்தது. இந்த பாதகமான நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்கு திட்டங்கள் தயாரிப்பதற்கும் அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. தேசிய பூங்காவிலிருந்து உழைக்கும் வருமானம் அதிகரித்துச் செல்வதன் மூலம் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக நிதியம் உருவாக்கப்பட வேண்டியதுடன் இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் கவர்ச்சிக்கு முக்கியத்துவமான யானைகள் காணப்படுவது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

### 3.6 மேய்ச்சல் நிலத்தினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்கான நிதி ஏற்பாடுகள்


சில தேசிய பூங்காக்களின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை செலவு செய்யப்படடுள்ள முறைமை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

#### 3.6.1 லாகுகல தேசிய பூங்கா

லாகுகல தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான 05 ஆண்டுகள் கால எல்லைக்குள் செலவு செய்யப்பட்ட பணத்தின் அளவு தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 13 - லாகுகல தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலத்தை முகாமைத்துவம் செய்வதற்கான நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| ஆண்டு | ஆண்டிற்காக வேண்டிக்கொள்ளப்பட்ட பணம் ரூபா | ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ரூபா | ஆண்டிறடகாக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா | செலவு செய்யப்பட்ட விடயம் |
|---|---|---|---|---|
| 2017 | - | 860,262 | இல்லை | |
| 2018 | - | - | - | |
| 2019 | - | - | - | |
| 2020 | - | - | - | |
| 2021 | - | 477,463 | 477,487 | அடி புதர்களை அகற்றுதல் |




**உருவப்படம் - 22 - லாகுகல தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலத்தை பேணிப் பாதுகாப்பதற்காக நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல்**

(அ) லாகுகல தேசிய பூங்காவில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் நிதி கிடைத்திருந்தும் எந்த முகாமைத்துவ நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அவற்றில் 03 ஆண்டுகளின் பின்னர் கிடைத்த பணம் அடிப் புற்களை அகற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேற்கூறிய வகையில் முறையான திட்டத்திற்கு இணங்க பணத்தை வேண்டிக் கொள்ளல் மற்றும் நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக தேசிய பூங்காவிற்குள் ஆக்கிரமிப்பு பயிர் பரவுவதனை கட்டுப்படுத்துவதற்கு முடியாது என அவதானிக்கப்பட்டது.


### 3.6.2 மின்னேரியா தேசிய பூங்கா

மின்னேரியா தேசிய பூங்காவில் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தின் அளவு தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் - 14- மின்னேரியா தேசிய பூங்காவில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்கான நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| ஆண்டு | ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ரூபா | ஆண்டிற்காக செலவு செய்யப்பட்ட பணம் ரூபா | செலவு செய்யப்பட்ட விடயம் |
|---|---|---|---|
| 2019 | 1,510,973 | 100% | ரம்பவில- படுஓயா வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,007,315 | 100% | கிரி ஓயா பவுபொல வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,309,510 | 100% | மஹஓயா - போக்குளம் வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,007,315 | 100% | 100 ஏக்கர் வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| 2020 | 750,450 | 50% | மஹபிடிய பிரதேசத்தின் வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| 2021 | 805,852 | 100% | தங்கொடே 100 ஏக்கர் வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,510,973 | 100% | மின்சார வயர் வீதியின் அடி மரங்களை அகற்றுதல். |

| | | | |
|---|---|---|---|
| | 1,510,973 | 100% | தேசிய பூங்கா தலைமை அலுவலகம் - படுஓயா வீதியின் வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,007,315 | 100% | கிரிஓயா -பதுபொல வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 1,309,510 | 100% | பேக்குளம் - மஹவெவ வீதியின் அடி மரங்களை அகற்றுதல் |
| | 109,515 | 100% | குளத்து மைதானத்தில் அகட பயிர்களை அகற்றுதல் |




**உருவபடம் - 23 - மின்னேரியா தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாப்பதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம்**

(அ) மின்னேரியா தேசிய பூங்பகாவில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியுள்ள பிரதேசங்களாக வெவ்பிடிய, மஹபிடிய, வேரபிடிய, உணயபிடிய, மின்சார வயர் வீதி ஆகிய பிரதேசங்கள் காணப்பட்டதுடன் மேய்ச்சல் நில முகாமைத்துவத்திற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை செலவு செய்யப்பட்ட பணம் தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது மேற்கூறிய பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுதலினைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவுவதனைக் கட்டுப்படுத்தும் வகையில் தொடர்ச்சியக அவற்றினை அகற்றுதல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய செலவு விபரங்களையும் பரீட்சித்த போது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக மஹபிடிய பிரதேசத்தில் 20 ஹெக்டயர் நிலப் பகுதியின் 75


சதவீதமான நிலப்பகுதியில் ஆக்கிரமிப்பு பயிர்கள் பரவியிருந்ததுடன் 25 சதவீதமான நிலப்பகுதியில் மாத்திரம் பரவுதல் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 750,449 ஆக (பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றல் 50 சதவீதம்) காட்டப்பட்டிருந்தது.

### 3.6.3 குமன தேசிய பூங்கா

குமன தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தின் அளவு தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் - 15- குமன தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்கான நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| ஆண்டு | செலவு செய்யப்பட்ட பணம் ரூபா | ஹெக்டயர் அளவு | செலவு செய்யப்பட்ட நோக்கம் |
|---|---|---|---|
| 2017 | 537,117 | | வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அடி மரங்களை அகற்றுதல் |
| 2018 | 2,016,187 | 44Km | வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அடி மரங்களை அகற்றுதல் |
| 2019 | 1,510,973 | 15Km | வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அடி மரங்களை அகற்றுதல் |
| | 3,777,433 | 75Ha | மேய்ச்சல் மைதானங்களின் அடி மரங்களை அகற்றுதல் |
| 2020 | 9,991,691 | 30Km | வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அடி மரங்களை அகற்றுதல் |
| | 2,452,812 | 50Km | மேய்ச்சல் மைதானங்களின் அடி மரங்களை அகற்றுதல் |
| 2021 | 4,790,020 | 48Km | வீதியின் இரு பக்கத்திலுமுள்ள அடி மரங்களை அகற்றுதல் |
| | 4,532,919 | 90Km | மேய்ச்சல் மைதானங்களின் அடி மரங்களை அகற்றுதல் |




**உருவப்படம் - 24 - அடி மரங்களை அகற்றுவதற்காக செலவு செய்யப்பட்ட பணம்**

குமன தேசிய பூங்காவில் ஆக்கிரமிப்பு பயிர் பரவியுள்ள மொத்த மேயச்சல் நிலங்களின் அளவு 1050 ஹெக்டயர்களாக இருந்ததுடன் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்காக மேய்ச்சல் நிலங்களில் 215 ஹெக்டயர்களில் மாத்திரம் ஆக்கிரமிப்பு பயிர்கள் நீக்கப்பட்டிருந்தது. செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 10,763,165 ஆகும். விபரம் கீழே தரப்பட்டுளது. இதற்கிணங்க மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.6.4 வில்பத்து தேசிய பூங்கா

வில்பத்து தேசிய பூங்காவில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தின் அளவு தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் - 16 வில்பத்து தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்கான நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்**

| ஆண்டு | செலவு செய்யப்பட்ட பணம் ரூபா | நிலத்தின் அளவு ஹெக்டயர் | செலவு செய்யப்பட்ட நோக்கம் |
|---|---|---|---|
| 2018 | 1,012,720 | 65 | யானைகள் உப இல்லம் மற்றும் யானைகளை வைத்திருக்கும் நிலையம் |

| | | | |
|---|---|---|---|
| 2019 | 1,259,144 | 25 | மஹவெவ, குடுக்வில மெனிக்வில பிரதேசங்களில் ஆக்கிரமிக்கும் பயிர்களை நீக்குதல் |
| 2020 | 1,000,315 | 20 | மேய்ச்சல் நிலங்களின் ஆக்கிரமிப்பு பயிர்களை அகற்றுதல் |
| 2021 | 4,029,216 | 80 | அடிமரங்களை அகற்றி மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல் |
| | 2,014,630 | 40 | தந்திரிமல பிரதேசத்தில் உப கட்டமைப்புக்களை நீக்கி மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல் |
| | 1,007,315 | 20 | கொக்மொடே மைதானத்தில் மேய்ச்சல் நிலங்னை உருவாக்குதல் |
| | 1,510,973 | 30 | பொம்பரிப்பு மைதானம்தில் மேய்ச்சல் நிலத்தை உருவாக்குதல் |
| | 755,488 | 15 | கொக்காரிய மைதானத்தில் மேய்ச்சல் நிலத்தை உருவாக்குதல் |
| | 503,657 | 10 | மெனிக்வில மைதானத்தில் மேய்ச்சல் நிலத்தை உருவாக்குதல் |


வில்பத்து தேசிய பூங்காவில் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக பணத்தை செலவு செய்துள்ள முறைமையை பார்க்கும் போது 2018, 2019, 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் பணம் செலவு செய்யப்பட்டிருந்தும் முறையான திட்டத்திற்கு இணங்க இடம்பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.6.5 ஹொரவ்பதான தேசி பூங்கா

ஹொரவ்பதான தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக செலவு செய்யப்பட்ட பணம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

**அட்டவணை இலக்கம் - 17- ஹொரவ்பதான தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| ஆண்டு | ஆண்டிற்காக வேண்டிக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டின் அளவு (ரூபா) | ஆண்டிற்காக கிடைத்த தொகை (ரூபா) | வேண்டிக்கொள்ளப்பட்ட பணத்தில் கிடைத்த பணத்தின் அளவு சதவீதமாக (%) |
|---|---|---|---|
| 2019 | 3,200,000 | 146,060 | 05 சதவீதம் |
| 2020 | 4,500,000 | 1,007,315 | 22 சதவீதம் |
| 2021 | 3,550,000 | 2,089,729 | 58 சதவீதம் |




**உருவப்படம் - 25 - - ஹொரவ்பதான தேசிய பூங்காவின் மேய்ச்சல் நிலத்தை முகாமைத்துவம் செய்வதற்காக பணம் கிடைத்தல்**

மேற்கூறிய தகவல்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் வேண்டிக்கொள்ளப்பட்ட பணத்தில் 5 சதவீதமும் 2020 ஆம் ஆண்டில் 22 சதவீதமும் 2021 ஆம் ஆண்டில் 58 சதவீதமுமாக கிடைத்திருந்ததுடன் முறைப்படியாக நிதி ஏற்பாடு கிடைக்காமையானது ஆக்கிரமிப்பு பயிர்களை தொடர்ச்சியாக கட்டுப்படுத்துவதற்கு தடையாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 3.6.6. அம்பாறை சரணாலயம் மற்றும் புத்தங்கல சரணாலயம் தொடர்பான அவதானிப்புக்கள்

அம்பாறை சரணாலயத்தின் மேய்ச்சல் நிலம் மாத்திரம் அண்ணளவாக 600 ஹெக்டயர் அளவாகவும் புத்தங்கல சரணாலயத்தின் மேய்ச்சல் நிலத்தின் அளவு அண்ணளவாக 500 ஹெக்டயர் அளவாகவும் காணப்பட்டது என அறிக்கையிடப்பட்டது. அம்பாறை சரணாலயத்தின் புல் மேயும் மிருகங்களான யானைகள், மான்கள், கடவை மான்கள் போன்ற மிருகங்களில் 100 இற்கு மேற்பட்ட அளவானவை வசிக்கின்றதுடன் புத்தங்கல சரணாலயத்திலும் இந்த புல்மேயும் 100 இற்கு மேற்பட்ட அளவான மிருகங்கள் வசிக்கின்றது என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த 05 ஆண்டுகளுக்குள் அதாவது 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை இந்த மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்வதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6.7 மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல்

மேய்ச்சல் நிலத்தைப் பேணிப்பாதுகாப்பது சம்பந்தமாக முறையான ஒரு திட்டம் இல்லாமை, தொடர்ச்சியாக நிதி ஏற்பாடு கிடைக்காமை, முன்னுரிமைப்படுத்தும் போது மேய்ச்சல் நிலத்தை பேணிப்பாதுகாப்பது சம்பந்தமான முன்னுரிமைப்படுத்தல் தெளிவாக இனங்காணப்படாமை போன்ற காரணங்களானது நிதி ஏற்பாடு போதியளவாக கிடைக்காமைக்கு காரணமாக இருக்கலாம் என அவதானிக்கப்பட்டது. தற்பொழுது காணப்படுகின்ற பொருளாதார பிரச்சினையை முன்னிட்டு நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யாமை நியாயமாக இருந்த போதிலும் இந்த நிலைமைக்கு முன்னர் நாடு வழக்கமான நிலையில் காணப்பட்டிருந்தும் கூட அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. சிபாரிசுகள்

4.1 மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பேணிப்பாதுகாத்தல் சம்பந்தமாக ஒரு தேசிய கொள்கை தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் மற்றும் அது சம்பந்தமாக முகாமைத்துவ திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து அமுல்ப்படுத்தலும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் ( பந்தி இலக்கம் 3.1.1/ பந்தி இலக்கம் 3.1.3)

4.2 வெளிநாட்டு ஆக்கிரமிப்பு தன்மையமான உயிரின வகைகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான தேசிய கொள்கை மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், ஆரம்ப கட்டத்திலேயே ஆக்கிரமிப்பு பயிர்களை இனங்காணலும் பயிர் பரவுவதனை தொடர்ச்சியாக கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்ததும் மற்றும் அவற்றிற்கு தேவையான நிதி வசதிகளை வழங்குதல் (பந்தி இலக்கம் 3.1.3 (அ),(ஆ),(இ)/ 3.2.3 (அ), (ஆ)/ (3.3.1 - 3.3.8 வரை))

4.3 காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்களை பேணிப் பாதுகாப்பதற்கும் மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மேய்ச்சல் நிலங்களை பேணிப்பாதுகாத்தல் நடைமுறைக்கு தேவையான நிதி ஏற்டபாட்டினை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் போது வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் (பந்தி இலக்கம் 3.2.3(ஆ))

4.4 மனைசார்ந்த மாடுகள் தேசிய பூங்காக்களுக்குள் அமைந்துள்ள மேய்ச்சல் நிலங்களுக்குள் நுழைவதனை கட்டுப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மாட்டு வளங்களை முறையான நடைமுறைக்கு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் (பந்தி இலக்கம் 3.4.3 - 3.4.5 வரை)

4.5 சுற்றுலா பயணிகள் அதிகரித்தலினை உள்ளடக்கிய விடயங்களின் அடிப்படையிலான மனித செயற்பாடுகளின் காரணமாக இடம்பெறுகின்ற பாதகமான செயற்பாடுகள் தீவிரமடையலாம் என்பதனால் அது சம்பந்தமாக காலரீதியான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் (பந்தி இலக்கம் 3.5.1)

4.6 குளத்து மைதானங்களில் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்கள் இயற்கையாக நிலைத்திருப்பதற்கு ஏற்பட்டிருந்த தடைகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் புதிய நீர்த் திட்ட செயற்திட்டங்களுக்காகவும் நீர்பாசன நடவடிக்கைகளுக்காகவும் நீரினை விடுவிக்கும் போது ஆண்டு முழுவதும் குளங்களில் நீர் தொடர்ச்சியாக நிரம்பிக் காணப்படுவதனால் குளத்து மைதானங்களில் புற்கள் வளர்வதற்கு தடையாக இருப்பதனால் அவ்வாறான செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது சமநிலையாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல் (பந்தி இலக்கம் 3.5.2 (i), (ii)/ பந்தி இலக்கம் 3.5.4 (இ) / பந்தி இலக்கம் 3.5.5 (ஆ)(i))

4.7 தேசிய பூங்காவிற்குள் காணப்படுகின்ற மேய்ச்சல் நிலங்களை முகாமைத்துவம் மற்றும் பேணிக்காத்தல் செய்யப்படாமையின் காரணமாக காட்டு யானைகள் கிராமங்களுக்குள் வருவதற்கு பிரதான காரணமாக இருந்ததனால் மேய்ச்சல் நிலங்களை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் (பந்தி இலக்கம் 3.5.5 (இ)(ii))

4.8 தேசிய பூங்காக்கள் சம்பந்தமான சுற்றாடல் நிலைமைகள் பற்றிய தரவு முறைமையை (மாதாந்த அறிக்கை) பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் (பந்தி இலக்கம் 3.5.5.)

ஒப்பம்./டபிளிவ். பீ. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிளிவ். பீ. சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2024 மார்ச 05